

இனநலம் பெரிது !

கருக்கும் வெயிலினில் சருகெனக் காயினும்,
காவிரி வற்றி,வாய்க் கால்வழி ஓடினும்,
நெருக்கும் வறுமையில்
[நல்லுயிர் துவளினும்,
நீடிய கோடையில் பயிர்வளங் குன்றினும்,
இருக்கும் நலன்களில் இனநலம் பெரிதென
எந்தமிழ் நல்லினம்
[நினைந்திடல் வேண்டும்;
செருக்கும் பொறுமையும்
[சிறுமைச் செயல்களும்
சிதைத்திடும் சிதைத்திடும்
[இனத்தினை, ஆதலால்!

(தொடர்ச்சி 1-ஆம் பக்கம்)

RECEIVED
18 JAN 1973
TANJORE

சுவடி: 10
ஓலை: 7-8

௭௫ காசு
75

நமக்கு வந்த மடல்கள்.

0 : 346 'கலைஞரின் கைகளை வலுப்படுத்துக!' ஆசிரியவுரை படித்தேன். உங்களது அழகு நடையைச் சுவைத்தேன்; மகிழ்ந்தேன்; ஆனால் அதில் உள்ள கருத்துகள் கண்டு ஏமாறினேன். நடிகர் இராமச்சந்திரனை நீங்கள் மலையாளி என்று ஒதுக்குவதால் தந்தை பெரியாரைக் கன்னடர் என்று ஒதுக்க முடியவில்லை என்று நீங்கள் கருதுகிறீர்கள். பாவேந்தனின் பாடல்களைத் தமது படங்களில் இடம் பெறச்செய்து தமிழருக்காக – தமிழ்மொழிக்காக—தி. மு. க. வுக்காக உழைத்த ஒரு நல்லவனை – அண்ணாவின் கனியை எடுத்தெறியத் துணிந்த கலைஞரை நீங்கள் காப்பாற்றப் போகிறீர்களா? உறுதியாகக் கூறுகிறேன்; தென்மொழி அன்பர்களை நீங்களும் தூய்மையற்ற அரசியல் கட்சிக்குப் பயன்படுத்த முனையாதீர்கள். உங்களது அரசியலை மொழியின் இடையில் புகுத்த வேண்டா என அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இம் முயற்சியைத் தொடர்ந்தால் அழகப்பர் கல்லூரி உங்களது ஏடுகளைத் தவிர்க்கும் நிலை ஏற்படும். இஃது அச்சுறுத்துவது இல்லை. அன்போடு விடுப்பது.

வ. தென்னவன்–காரைக்குடி–3.

0. 347 நீர் மேடைக்கு மேடை கரடியாகக் கத்தியும், தாள் தாளாக எழுதிக் கிழித்தும் திருச்சித் தேவர் மன்றக் கூட்டத்திற்கு 200 பேர்கள் கூட வரவில்லை. 'தென்மொழி' இதழோ, விகடராமன் குதிரையின் வேகத்தில் வெளிவந்து கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அருட்செல்வரின் காலைப் பிடித்துள்ளது வியப்பன்று. உம்மிடம் எதிர்பார்த்த ஒன்றே. இதனையொட்டி உமக்குத் தனிப்பட்ட முறையில் 'நல்ல காலம்' பிறக்கலாம்!

—சைக்கோ. எசு. எஃப்: சுந்தரராசு.–திருச்சி.

0: 348 கடந்த ஆண்டு அண்ணாமலை நிகழ்ச்சிபற்றித் தாங்கள் "சுண்டல் ஆகுக; கடலை ஆகுக" என்று எழுதியிருந்த போது, அஃதாவது அச்செயலைக் கண்டித்த போது தி. மு. க. நண்பர்கள் பாசறையின்மேல் பொங்கி எழுந்தனர். இன்று 'அருட்செல்வர் ஆட்சியை அரணிட்டுக்காக்க!' என்று எழுதியிருக்கின்ற போதும், அஃதாவது காப்பாற்றச் சொல்கின்ற போதும் அதே மாணவர்கள்தாம் சீறுகின்றனர். தலைவர்கள் கட்சிமாறுகின்றனர். இப்போது மாணவர்களும் கட்சி மாறுவதைக் கற்கின்றனர். தவற்றைக் கண்டிக்கவும், தக்க நேரத்தில் காப்பாற்றவும் அவர்கள் முறைபபடி கூடாது போலிருக்கின்றது. இம்மாணவர்களைச் செம்மறியாட்டுக் கூட்டத்தில் சேர்ப்பதா? அல்லது பச்சோந்திக் கூட்டத்தில் சேர்ப்பதா? தாங்கள் கலைஞரைச் சந்தித்ததும் எதற்காகவிருக்கும் என்பதும் தெரியும். எதற்கும் கவலற்க. இங்கே உங்களைக் கலைஞர் கட்சியில் மாணவர்கள் சேர்த்துவிட்டனர். "தென்மொழியின் ஆசிரியவுரைகள் எந்தக் கட்சிக்கும் விளம்பர வண்டியாகப் பயன்பட்டதில்லை" என்று அவர்கள் படிக்கவில்லை போலும்.

—நாட்டுச்சாலைத் தமிழன்பன்-காரைக்குடி-3.

[தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்.]

(முகப்புப் பாடல் தொடர்ச்சி)

வெறுக்கும் படியொரு புன்மை விளையினும்,
விணர் பலரிகழ்ந் தலர்மொழி யுரைக்கினும்,
மறுக்கும் படியிலாக் குறைசில நேரினும்,
மாற்றவர் அவற்றையே மனஞ்சுடச் சுட்டினும்,
பொறுக்கும் நிலைக்கெலாம் இனநலம் பெரிதெனப்
பொறைதமிழ் நல்லினம் நினைந்திடல் வேண்டும்;
குறுக்கில் நுழைதலும் குப்புறக் கவிழ்த்தலும்
குலைத்திடும் குலைத்திடும் இனத்தினை, ஆதலால்!

தப்பித் தவறியோர் தலைவனிங் கெழுந்து,முன்
தடங்கெட நடக்குநந் தமிழரைக் கூட்டியே
வெப்பினும் மழையினும் நமக்கென நடக்கையில்
வெறுக்கலி லாமன வேட்கையில் பிழைசில
திப்பியைப் போலவே தெரியினும் தேன்பெறுந்
தேவையால் இனநலங் காத்திடல் வேண்டும்;
துப்பலும் தூறலும் அடியறத் துணித்தலும்
தொலைத்திடும் தொலைத்திடும் இனத்தினை, ஆதலால்!

முத்தினை எடுக்கையில் சிப்பியைத் தவிர்த்தல்போல்,
மொந்தையை வடித்ததன் கள்ளினை யருந்தல்போல்,
மத்துநெய் வழிக்கையில் மற்றது விடுத்தல்போல்,
மண்டிள நீரினில் மட்டையை நீக்கல்போல்
ஒத்துளங் கொண்டிடும் நிலைகளில் இனநலம்
உயர்வெனத் தமிழினம் நினைந்திடல் வேண்டும்;
குத்தலும் குடைதலும் குறும்புசேர் உரைகளும்
கொன்றிடும் கொன்றிடும் இனத்தினை, ஆதலால்!

நூறுநூ றாண்டுகள் நொடிந்திடு மோரினம்
நொண்டியின் நடைநடந் திளநடை பயில்கையில்
ஏறென முன்நடப் போன்மன ஏழ்மையால்
ஏஎதோ ஓரிரு பிழைசெயல் உண்மையால்
வேறெனக் கருதிடா தினநலம் பெரிதென
விறல்தமிழ் மறலினம் நினைந்திடல் வேண்டும்;
காறலும் கனைத்தலும் கயமைகள் விளைத்தலும்
கவிழ்த்திடும் கவிழ்த்திடும் இனத்தினை, ஆதலால்!

தென்மொழி
இலக்கிய இதழ்

"கெஞ்வதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 10: ஓலை: 7-8

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

நளி–சிலை தி. பி. ௨௦௦௩ – (திச, 72– சன, 1973.)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1 தமிழகம்.

ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்!-1

ஆரியப் பார்ப்பனர்கள் அளவில் சிறிய இனத்தவராயினும் அவர்கள் இந்தியாவை –குறிப்பாகத் தமிழ் நாட்டைக் கெடுப்பது போல் வேறு எந்த இனமும் கெடுக்கவில்லை. அரசியலிலாகட்டும் பொதுவாழ்வியலிலாகட்டும் அவர்களின் திருவிளையாடல்கள் தனித்தன்மை வாய்ந்தவை. இவைபற்றி ஏற்கனவே பல முறை பலவாறும் விரித்து எழுதியிருந்தாலும், அவர்களைப் பற்றிய தனி ஆய்வு இது. பொதுவாழ்வில் அவர்களால் மற்ற இனங்களுக்கு ஏற்படும் தொல்லைகள் அல்லது அவர்களின் தலையீடுகள், அவற்றால் விளையும்

கேடுகள் அளவுக்கு மீறி நடைபெறுவதால் இத்தகைய ஒரு தொகுப்பு நோக்கு தேவைப்பட்டது.

ஆரியப் பார்ப்பனர்கள் அல்லது பிராமணர்கள் எனப்படுவோர்க்கு இந் நாட்டில் ஒரு வரலாற்றுத் தொடர்பு உண்டு என்றாலும், அஃதெல்லாம் ஓர் ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுக் காலச் சிறப்புடையதே. ஆனாலும் அவர்கள் வேதங்களிலும், பழங் கதைகளிலும் இத்தொடர்பு ஐம்பதினாயிரம் அறுபதினாயிரம் ஆண்டுகள் என்று கட்டியுரைக்கப் பெற்றுள்ளது. இதனால் பிற்காலத்து வரலாற் றாசிரியர்கள் அனைவரும் இவர்களைப் பற்றிய உண்மை வரலாறு தெரியாமல் பலவகையிலும் தம்முள் வேறுபட நேர்ந்தது. வேதங்கள் அனைத்தும் கட்டுஉரைகளே! அவற்றில் வரும் செய்திகள் யாவும் இவர்களின் வளமிகுந்த கற்பனை உரையாடல்களே. இந்நாட்டுப் பழங்குடிகளிடம் இவர்கள் நடத்திய போராட்ட வெறுப்புணர்ச்சிகளே இரிக்கு வேத அதர்வ வேத மந்திரங்களாக விளங்குகின்றன. எதிரிகளை வெல்வதற்கும் கொல்வதற்கும் இவர்கள் கொண்ட முயற்சிகளே-இவர்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட கூட்டு உணர்ச்சிகளே எசுர் வேத வேள்விகளாகக் காணப்படுகின்றன. அவற்றில் காணப் பெறும் சில பச்சையான அருவருப்பு நிகழ்ச்சிகளைக் கொக்கோக நூல்களிலும் காண்பதரிது. காட்டு விலங்காண்டிகள் போல் அவர்கள் நடந்து கொண்ட முறைகள் அவ் வேதங்களில் நன்கு வண்ணிக்கப் பெறுகின்றன. எனினும் இவர்கள் அவ் வேதங் களைத்(அநாதி)தோற்றுவிக்கப் பெறாதவை என்றும்,தொன்று தொட்டு வருவன என்றும், இறைவனுக்கு முந்தித் தோன்றியவை என்றும் பொய்யுரையும் புளுகுரையும் கூறிப் பழங்கால மக்களை ஏமாற்றி வந்தனர்; இன்றுவரை அவற்றையே திரும்பத் திரும்பக் கூறிக் கற்றவர்களையும், அறிஞர்களையும் ஏமாற்றப் பார்க்கின்றனர். வரலாற்றாசிரியர்கள் சிலரும் இவர்களின் மதிமயக்குப் பேச்சுகளில் நம்பி உண்மையைப் பறிகொடுத்துள்ளனர். வேதங்களை நேரிடை யாகப் படித்தவர்களுக்குப் பெருத்த ஏமாற்றமே காத்திருக்கின்றது. இருப்பினும் அவ்'வேத' 'புராண' 'இதிகாச'ங்களை வைத்துக் கொண்டு ஆரிய இனத்தவரில் பெரும்பாலோர் பிழைத்து வருகின்றனர்.

தொடக்கக் காலத்திலிருந்தே ஆரியப்பார்ப்பனர்கள்திட்டமிட்டு அரசியலையும் வாழ்வியலையும் கெடுத்து வந்தமைக்கு அளவிறந்த சான்றுகள் உண்டு. இந்திய வரலாற்றில் அரசர்களின் வீழ்ச்சிகள் குறிக்கப்படும் இடத்திலெல்லாம் பார்ப்பனியம் நடத்திய திருவிளை யாடல்களை நன்கு உணரலாம். காலம் செல்லச் செல்ல இவர்களின் மேலாண்மைகள் ஓரளவு குறைந்து கொண்டே வந்தாலும், இன்றும்

தனிப்பட்ட நிலையில் ஒவ்வோர் ஆரியப் பார்ப்பனனும் வேத கால ஆரியத்தினின்று எவ்வகையிலும் மாறுபட்டவன் அல்லன். அவன் மனத்திலும் நடவடிக்கைகளிலும் என்றும் தான் எல்லாரினும் படைப் பால் உயர்ந்தவன் என்பதும் பிறர் எல்லாரும் தனக்குக் கீழானவர் என்பதுமே காணக் கிடக்கின்றன.

அரசியல் நிலையில் அவர்கள் செய்கின்ற கீழறுப்பு வேலைகள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆட்சியைப் பொறுத்த அளவில் பார்ப்பனர்கள் எக்காலத்தும் இரு பிரிவினராகவே பிரிந்து செயல்படுகின்றனர். ஒரு பிரிவு ஆளுங்கட்சியைச் சார்ந்து நிற்கும். மறுபிரிவு எதிர்க்கட்சியைச் சார்ந்து இயங்கும். இதனால் எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர் களின் ஒரு பகுதியினரால் மற்ற பகுதியினர்க்கு மறைமுகமான நன்மைகள் கிடைத்துக் கொண்டே இருக்கும். (பிற இனத்தவர்க்கோ இவர்களால் என்றும் தொல்லைதான்.) ஆட்சிக்கு எதிரான பிரிவு மக்க ளிடையே எப்பொழுதும் ஒரு வகையான நிறைவில்லாத தன்மையை உருவாக்கிக்கொண்டே இருக்கும். சில நேரங்களில் குழப்பத்தையும் அந்நிலை தோற்றுவிக்கும். இதற்கு இக்காலத்தில் ஓர் எடுத்துக்காட்டு தரவேண்டுமாயின் 'ஆனந்தவிகடனை'யும் 'துக்ளக்கையும் சொல் லலாம். ஆனந்தவிகடன் அச்சகத்திலேயே துக்ளக் அச்சிட்டு வெளிப்படுத்தப் பெறுகின்றது. மேலும் இரண்டாவதன் பொறுப்பும் முதலாவதைச் சேர்ந்ததே! அவ்வாறிருக்கையில் 'ஆனந்தவிகடன்' அரசியல் கொள்கை 'துக்ளக்'கால் தாக்கப்பெறும். 'துக்ளக்"கின் போக்கைக் கண்டித்து ஆனந்தவிகடனில் கட்டுரை வரும். இரண்டு நிலைகளையும் இரண்டு வேறுபட்ட போக்குகளாகக் கொண்டு இளிச்ச வாய்த் தமிழர்கள் அவ்விதழ்களைப் போட்டி போட்டுக் கொண்டு வாங்கிப் படித்து வருவார்கள். இத்தகைய 'சகுனி' 'சாணக்கிய' வேலைகள் ஆரியத்தின் தலையாய தந்திர முறைகளில் ஒன்றாகும். இதனால் அவ்வினம் பெறுகின்ற நேரடி–மறைமுக ஊதியங்களுக்கு அளவே இல்லை. இன்றும் இந்தியாவில் மேலைப் பைதிரத்தில் உள்ள 'அகில பாரத ஆரிய சபா' முதற்கொண்டு தில்லியிலுள்ள 'பாரதீய சனசங்கம்' வரையுள்ள ஏறத்தாழ எண்பது அரசியல் கட்சிகளிலும் பெரும்பாலான வற்றில் பார்ப்பனர்களே முகாமையாக இருந்து வேலை செய்கின்றனர். அவர்களின் பழைமைக் கொள்கைகளுக்கு முற்றிலும் நேர் எதிரிடையான பொதுவுடைமைக் கட்சிகளிலும் கூட அவர்களே மேல்வரிசைத் தலைவர்களாக விளங்குகின்றனர் எனின், அவர்களின் அரசியல் நரித்தனங்களைப் பற்றி மிகுதியும் விளக்கத் தேவையில்லை.

இன்னும், தங்களுக்கு வேண்டாத பிற இனத்தவரின் ஆட்சி ஏற்பட்டு விடுமானால் இவர்களின் வெறுப்பு வேலைகளுக்கும், பொறுப்

பற்ற மனப்போக்குக்கும் அளவே இல்லை. இக்கால் தமிழக அரசு தங்களுக்குத் துணையாக இல்லை—அல்லது தங்களில் ஒருவரையும் அவர்கள் அமைச்சராக அமர்த்த வில்லை என்பதற்காகவே, பார்ப்பனர்கள் செய்யும் குழிபறிப்பு வேலைகள் எண்ணற்றன. இக்கால் அரசு அலுவலகங்களில் நடக்கும் ஊழல்கள், கையூட்டு வாங்குதல், வேலைகளைச் சுணங்கப் போடுதல், வேண்டாதார்க்குப் பலவகையிலும் இருட்டடிப்புச் செய்தல், வேண்டியவர்க்குச் சலுகைகள் காட்டுதல் முதலிய பெரும்பாலான சீர்கேடுகளுக்கும் பார்ப்பனர்களே மிகுதியும் பொறுப்பாவார்கள். வேண்டுமென்றே அவர்கள் இப்படிச் செய்கின்றார்கள். இப்படிச் செய்வதால் மக்களுக்கு அரசின்மேல் ஒருவகை வெறுப்பு ஏற்படட்டும் என்பதே இவர்களுடைய எண்ணமாகும். இதைப் பலவகையிலும் மறைப்பதற்காகத் தாங்களாகவே இக் குற்றச் சாட்டுகளில் முந்திக் கொள்கின்றனர். காலஞ்சென்ற இராசாசி முதல் கல்கி அலுவலகக் கடைசிப் பார்ப்பான்வரை இதை அறிந்திருந்தும் மிகவும் நாண்யமுள்ளவர் போலவே நடித்துப் பேசி வருகின்றனர்.

இக்கால் அரசு அலுவலகங்களில் பார்ப்பனப் பெண்கள் பணியாற்றுவது மிகுந்து வருகின்றது. அப்பெண்களின் நடைமுறைகளில் உள்ள பண்பாட்டுக் குறைவான செய்திகளைக் கூறுவதற்கே நா கூசும். பார்ப்பன வழக்கறிஞர்கள் சிலர் தம் பெண்டு பிள்ளைகளை வைத்தே வழக்குகளை வெற்றியாக நடத்திக் காட்டிய வரலாறும் உண்டு. தம் இனத்தான் ஒருவன் அலுவலக மேலதிகாரியாகவோ, அத்துறைச் செயலராகவோ வந்துவிட்டால் அவர்களின்கீழ்ப் பணியாற்றும் அனைத்துப் பார்ப்பனர்களும் அவர்களுக்கு எப்படி ஒத்துழைக்கின்றனர் என்பதையும், அவ்வாறில்லாவிடத்து அவர்கள் எப்படிக் கீழறுப்பு வேலை செய்கின்றனர் என்பதையும் அவ்வத் துறைகளில் பணியாற்றும் பிற இன அலுவலர்கள் நன்கு அறிவர்.

அலுவலகங்களில் உள்ள கடவுளர் படங்கள், பிள்ளையார் கோயில்கள் அவற்றுக்கான பூசனை, வழிபாடுகள், திருவிழாத் தண்டல்கள் முதலிய யாவும் ஆங்காங்குள்ள பார்ப்பன அதிகாரிகளின் தூண்டுதல்களே. அந்நிகழ்ச்சிகளால் அவ் வதிகாரிகளின் ஒழுக்கக் கேடுகள், கையூட்டு, ஊழல் நடவடிக்கைகள், இனச் சலுகைகள் போன்றவை பெரிதும் மறைக்கப் படுகின்றன. அவ்வலுவலகங்களில், உள்ள தமிழர்களோ, பிற இனத்தவர்களோ கடந்த காலங்களில் இவற்றைக் கண்டுங் காணாதவர்போல் இருந்து வந்தனர். இக்கால் அவற்றை ஆங்காங்குக் கண்டிக்கத் தொடங்கியுள்ளனர். எனவே அவர்களுக்குத் துணைபோகும் அரசை அப் பார்ப்பனர்கள் தூற்றத் தொடங்கியுள்ளனர்.

கல்வித் துறையில் அவர்களால் ஏற்படும் சீர்கேடுகளுக்கோ வரைமுறையே இல்லை. பார்ப்பன ஆசிரியர்கள் தங்களின் கீழ் உள்ள பார்ப்பன மாணவர்களுக்குத் தனிச் சலுகைகள் காட்டுவதும், தங்களுக்குப் பிடிக்காத மாணவர்களுக்கு என்னென்ன கெடுதல்கள் செய்ய முடியுமோ, அத்தனைக் கெடுதல்களையும் தங்களால் முடியா விட்டாலும் அடுத்தவர்களிடம் சொல்லியாகிலும் செய்வதும், இயல்பான காட்சிகளாகிவிட்டன. பார்ப்பனத் தேர்வாளர்கள் சிலர் தங்களை எவ்வாறோ அறிந்து தேடிப்பிடித்து வரும் மாணவர்களிடமும் அவர்தம் உறவாளர்களிடமும் பெருத்த தொகைகளை வாங்கிக் கொண்டு தேர்வு செய்வதும், பிறகு அத்தகையவர்களே 'கல்வித் துறையில் ஊழல் மலிந்துவிட்டது'-என்று கூக்குரலிடுவதும் மெய்ப்பிக்க முடியாத உண்மைகளாக விளங்குகின்றன. நாட்டில் ஊழல்கள் என்று பேசப் பெறுகின்றவற்றுள் பெரும்பாலானவை ஆரியப் பார்ப்பனர்களால் செய்யப் பெறுவனவே! பிற இனத் தவரை அமைதியாக ஆளவிடக் கூடாது என்பதே அவர்களின் தலையாய நோக்கம். இவர்களுக்குப் பக்கத் துணையாக நிற்பவை அவர்களிடம் உள்ள ஆங்கில, தமிழ்ச் செய்தித் தாள்களே! அவை பொய்த்துத் தள்ளுவதற்கு ஓர் எல்லையே இல்லை.

பார்ப்பனர்களின் கையுள் வலிவான செய்தித்தாள்கள் இருப்பதாலேயே அவர்கள் பொதுமக்களிடம் தங்களுக்குச் சார்பான கருத்துகளை எளிதாக உருவாக்க முடிகின்றது. இந்து, எக்சுபிரசு, மெயில் போலும் ஆங்கில நாளிதழ்களிலும், சுதேச மித்திரன், தினமணி, தினமலர் போலும் தமிழ் நாளிதழ்களிலும், கல்கி, ஆனந்தவிகடன் குமுதம், தீபம், கலைமகள், துக்ளக் போலும் கிழமை, மாத இதழ்களிலும் அவர்கள் எழுதும் எழுத்துகளே இந்நாட்டை ஒரு நிலையான ஆட்சிக்குக் கொண்டு வரமுடியாமல் செய்கின்றன என்றால் அது மிகையாகச் சொல்லப்பெற்றதாகாது. வடபழனியில் உள்ள பிள்ளையார் கோயிலின் ஒரு செங்கல் இடிந்து விழுந்தாலும், அந்தச் செய்தித்தாள்களில் முதல் பக்கத்தில் முதல் வரியில் செய்தி வரும். தலைமைத் தமிழன் ஒருவன் வீடோ நிலமோ பறிபோனாலும் அச்செய்தி வராது. எங்காவது ஓர் எளிய ஆசிரியப் பார்ப்பானோ, ஒரு பார்ப்பன நாட்டிய நங்கையோ இறந்து போனால் ஊரே கொள்ளையில் அழிந்து போனதுபோல், பெரிய அளவில், இறந்துபோனவர்களின் படம், வரலாறு, அவர்களின் பண்பு நலன்கள் ஆகிய அனைத்து விளக்கங்களுடனும், அவர்களின் இழவால் இந்நாட்டுக்கோ, கலைக்கோ ஏதோ நேரமுடியாத இழப்பு ஏற்பட்டு விட்டது போலவும் இட்டுக்கட்டி – பூனையை யானையாக்கிச்

செய்திவரும். ஆனால் தமிழினத் தலைவர்களில் பாவேந்தர் பாரதி தாசனைப் போன்றவர்கள் மறைந்து போனாலும் எங்கோ ஒரு மூலையில் ஓரிரண்டு வரிகளில்தான் அவற்றில் செய்தி போடுவார்கள். கடந்த இருமாதங்களுக்கு முன் பாளையங்கோட்டையில் உள்ள பார்ப்பனப் பேராசிரியர் ஒருவர் அடிபட்ட செய்தி பார்ப்பன இதழ்களில் நாள்தவறாமல் பெரிது படுத்தி எழுதப் பெற்று, அல்லோல கல்லோலப் படுத்தப் பெற்றது. அதன் காரணியமாகப் பல கல்லூரிகளும் மூடப் பெற்றுக் குழப்பங்கள் விளைந்தன. அதுவுமன்றி, அண்மையில் முழுக்க முழுக்கத் தமிழர்களாகவே உள்ள ஆளுங்கட்சியான தி.மு.க. தங்கள் நெடுநாளைய விருப்பப்படியும் வடவர் செய்த இரண்டகச் செயல்களின் படியும் இரண்டாக உடைந்ததைப் பயன்படுத்தி, எதிர்ப்பாளராகிய எம். சி. இரா. விற்கு இவர்கள் தரும் விளம்பரங் களும், அவர் கருத்தைப் பெரிது படுத்திப் பொதுமக்களுக்குத் தி. மு. க. வின் மேல் வெறுப்புண்டாகும்படி செய்யும் முயற்சிகளும் மேலே கூறிய கருத்துரைகளை மெய்ப்பிக்கப்போதுமான சான்று களாகும். சூத்திரர்கள் ஆட்சியில் பிராமணர்கள் வாழக்கூடாது என்பதும், அவ்வாட்சியைத் திட்டமிட்டுக் கவிழ்த்தல் வேண்டும் என்பதும் இவர்களின் வேத, புராணங்கள் பறைசாற்றுங் கொள்கை. அக்கொள்கை இவ்விருபதாம் நூற்றாண்டிலும் இவர்களை விட்டுப் போனதாகத் தெரியவில்லை.

அண்மையில் இராசாசி இறந்து போனதை 'ராஜாஜி அமர ரானார்' என்று தினமணி தலைப்பிட்டு எழுதியதுடன் அந்த (26-12-72) நாளில் வந்த இதழின் எட்டுப் பக்கங்களிலும் அவர்களுடைய தலைவரைப் பற்றிய செய்தியே நிறைந்திருந்தது. அவரை என்னென்ன சொற்களைக் கொண்டு புகழ முடியுமோ, எவ்வெவ் வகையில் அவர்க்கு உயர்ச்சி காட்ட முடியுமே, அவ்வச் சொற்களால் அவ்வவ் வகையிலெல்லாம் வானளாவப் புகழ்ந்துதள்ளியிருந்தது தினமணி, 'மாமலை சாய்ந்தது' என்னும் தலைப்பிட்டுத் தினமணிச் சிவராமன் எழுதிய அன்றைய ஆசிரியவுரையைப் படித் தவர்கள் இந்தியாவில் உள்ள எல்லா நல்லறங்களும், நலன்களும் இராசாசியோடு பறிபோய்விட்டதாகவே உணர்வார்கள். 'விடுதலை வீரர்,அபார ராஜதந்திரி,சிறந்த நிர்வாகி, தீண்டாமை ஒழிப்புக்கு வரிந்து கட்டிக்கொண்டு பாடுபட்ட தீரர், ஆன்மீக உயர்வினால் ராஜ ரிஷியாகத் திகழ்ந்தவர், ஏழைப்பங்காளர், குண நலன்களின் உறைவிடம், தலைசிறந்த பண்பினர், அறநெறியின் உருவம், ஜனநாயகத்தின் காவலன், சமாதானப் பிரியர், முன்னணி எழுத் தாளர், மாமேதை, பாரதப் பண்பின் உயர்நிலைகளை வாழ்ந்து

காட்டியவர். இத்தகைய சிறப்புகள் அனைத்தும் ஒருங்கிணைந்து வேறு எவரிடமும் காண முடியாது. அவர் தமது சாதனைகளால் யுக புருஷர்கள் வரிசையில் இடம் பெறக் கூடியவர்'—இவ்வாறு எழுதியது தினமணி. இங்குக் கூறப்பெற்ற புகழுரைகளுக்கு இராசாசி உரியவரா அல்லரா என்பதன்று நம் கேள்வி. இத்தகைய உரை இராசாசிக்காகத்தான் எழுதப்பெறும் என்பதன்று; பார்ப்பன இனத் தலைவர்களாக உள்ள எவருக்கும் – காஞ்சி காமகோடிப் புதுப் பெரியவாள் மறைந்தாலும் அவருக்கும் – எழுதப் பெறும் ஒரு வேட்கை உரையாகும். இராசாசி மறைந்த பொழுது திரு. ஈ. வே. இரா.அவரை 'ஒரு பெரியார்'என்று சொன்னதற்காகவே ஈ.வே.ராமசாமிநாய்க்கர் என்பதைத்தவிர வேறுவகையாக எழுதாத தினமணி அன்று ஈ. வே, இராமசாமிப் பெரியார் என்று எழுதியிருந்ததை ஆழ்ந்து நோக்கு வார்க்கு 'அவாளின்' இன நல வுயர்ச்சி நோக்கம் விளங்காமல் போகாது. இராசாசி இருக்கும் பொழுது அவரின் அரசியல் கருத்துரைகளை ஒருபொருட்டாகவே மதிக்காத தலைமையமைச்சர் இந்திரா காந்தி கூட, 'அவர் ஒரு மேதை; சிக்கல்களை அலசி ஆராயும் திறனுள்ளவர், எதிர்கால நோக்குள்ளவர், அவர் ஒரு பெரிய அரச தந்திரி' என்றெல்லாம் புகழ்ந்துரைத்தார். அத்தகைய அறிவு வன்மை யாளரின் அறிவுரைகளை அம்மையார் பயன்படுத்திக் கொள்ளத் தவறியது ஏனோ?

இத்தகைய நிகழச்சிகளால் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னெனின், பார்ப்பனர்களுக்கு வேண்டியதானால் துரும்பும் தூணாகும், வேண்டாதெனில் தூணும் துரும்பென்று இழித்துரைக்கப்பெறும். அதற்கான ஆற்றல்கள் — செய்தித்தாள் வன்மைகள் அவர்களிடம் உண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது என்பதுதான். அத்துடன் நாம் இன்னொன்றையும் மறந்து விடக்கூடாது. தினமணி, மித்திரன், கல்கி, விகடன், இந்து, எக்சுபிரசு போன்ற இதழ்களின் கையோங்கிய ஓரின நடவடிக்கைகள் ஒருபுறம் இருக்கட்டும். இக்கால் பல இழிவான பாலியல் இதழ்கள் வேறு மாணவர்களை வந்து பாசக்கயிறுகள்போல் பிணித்துக்கொண்டுள்ளன. அவற்றின் பெயர்களே தமிழ் மொழியை இழிவு படுத்துவதுபோல் அமைந்திருக்கும். எழுத்து என்பது ஓரிதழின் பெயர். கசடதபற என்பது மற்றோர் இதழின் பெயர். ஓரிதழின் பெயர் புள்ளி. தலையெழுத்து என்றும் ஓரிதழ் வருகின்றது. இவ்வாறு பற்பல இதழ்கள் தொடர்ந்து வெளி வருகின்றன. இவையன்றி அனுராதா, காரிகை, காமம், துக்கடா, மல்கோவா, சரசி, வாலிபம், தேன் கிண்ணம், மதுக்கிண்ணம் போலும் இதழ்கள் குப்பைத் தொட்டியில்

மொய்க்கும் ஈக்களைப்போல் நாளுக்கு நாள் மிகுதியும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை பார்ப்பனரின் தூண்டுதலால் நடத்தப்பெறும் இதழ்களே! இவை தமிழ் மொழியை இழிவுபடுத்தும் நோக்கத்துடனும் அதில் உள்ள இலக்கிய இலக்கண அமைப்புகளைக் கிண்டல் செய்து தகர்த்தெறியும் எண்ணத்துடனும் பார்ப்பன விடலைகளால் வெளியிடப்பெறுவன ஆகும். அவற்றில் வெளிவரும் கதைகளில் வரும் பாலியல் செய்திகளை மற்றொருவரிடம் படித்துக்காட்டவோ, படிக்கக் கொடுக்கவோ முடியாது எனின், அவற்றைப்பற்றி வேறு என்ன சொல்வது? அவற்றின் தலையாய நோக்கம் தமிழ்ப் பண்பாட்டைக் கெடுக்க வேண்டுமென்பதும், தமிழ் இலக்கியங்களையும் நெறி நூல்களையும் அழித்துவிட வேண்டும் என்பதுமே ஆகும். மற்றும் அவ்விதழ்களில் வரும் படங்களோ இழிவின் கழிவறைகள். குமுகாயக் கேடர்களின் வெறியாட்ட உடலுறவுச் செய்திகள் அமெரிக்க நாகரிகத்தை இங்கு வேரூன்றச் செய்யும் நோக்கத்தோடு மட்டும் வெளியிடப் பெறுவன அல்ல; மறைந்துவரும் ஆரிய வேத, புராண, இதிகாசங்களுக்கு மீண்டும் மதிப்பு ஏற்படுத்த வேண்டும் என்னும் கருத்தோடும் வெளியிடப் பெறுவனவாகும். மனவுயர்வை அழித்துவிடும் ஒரு கெடும்பு நிலையில் மக்களைப்படிப்படியாகக்கொண்டு ஆழ்த்திவிடும் அதே நிலையில், இராசாசி, காஞ்சிப் புதுப்பெரியவாள் போன்றவர்கள் சொல்லும் இராமாயண, பாரத, இதிகாச விளக்கங் களும், வேத, புராண, கீதைப் பொழிவுகளும் அமிழ்ந்து போகும் உள்ளங்களுக்குக் கலங்கரை விளக்கங்கள்போல் கருத்திலும் கண்ணிலும் படவேண்டும் என்பதே அவர்கள் உட்கருத்தாகும்.

இக்கால் மாணவர்களுக்கிடையில் உள்ள போராட்ட உணர்ச்சிகளுக்கும், பாலியல் ஒழுக்கக் கேடுகளுக்கும் பெரும் பாலும் பார்ப்பன மாணவர்களே தூண்டு கோலாயிருக்கின்றனர். கிருதா வைத்துக் கொள்ளுதல் முதல் தலைமயிரை அலங்கோலமாய்க் கலைத்து விட்டுக் கொள்ளுதல், உடைகளைப் பல வண்ணங்களிலும் வகைகளிலும் தைத்து உடுத்திக் கொள்ளுதல், 'இப்பி'போல் நடந்து கொள்ளுதல் வரை அனைத்துக் கோமாளிக் கூத்துகளுக்கும் நிலைக்களனாக இருப்பவர் பார்ப்பன மாணவர்களே! இத்துறையில் பார்ப்பனப் பெண்களும் விலக்கல்லர். தமிழகத்தின் அனைத்துக் கல்லூரி மாணவர்களிடமும் இந்த நோய் குடிகொண்டுள்ளதற்குப் பார்ப்பனர்களின் அமெரிக்கப் பாலியல் வெறியே அடிப்படைக் கரணியம். சென்னையில் பார்ப்பன இளைஞர்கள் சிலரிடம் உள்ள வெளிநாட்டுப் பாலியல் இதழ்கள், படங்கள், திரைப்படச் சுருள்கள்

முதலியவை இருப்பதாகக் கேள்விப்பட்டு மிக வருந்த நேரிட்டது. இவ்வாறு நாட்டை அழிம்பு நிலைக்குக் கொணரும் பார்ப்பன இனம், அதற்கு வேறு எவரையோ கரணியங் காட்டித் தம் சமயத்துறைக்கு மறைமுகமாக நல்ல வரவேற்பைத் தேடிக் கொண்டிருக்கின்றது.

சமயத்துறையில் ஆரியப் பார்ப்பனர் செய்யும் அடாத செயல்களுக்கு அளவே இல்லை. கடவுளர்களுக்கு இவர்களே சொந்தக் காரர்கள் போல் இவர்கள் நடந்து கொள்ளும் முறைகள் மற்ற இனத்தவரை வெறுப்படையச் செய்கின்றன. அலுவலகங்களில் நிகழ்த்தப் பெறும் கருவிப் பூசை (ஆயுத பூசை), கலைமகள் பூசை (சரசுவதி பூசை) முதலியவற்றிற்கும் அவர்களே கரணியம். விளக்கணி விழா (தீபாவளி) நாட்களில், குறைந்தது பத்துப் பதினைந்து நாட்கள் தெருக்களில் நடமாடமுடியாமல் செய்யும் வகையில் குவியல் குவியலாக வெடிகளைக் கொளுத்திப் போட்டுக் காட்டுத் தனமாக வெறிக் கூச்சல் இட்டுக்கொண்டு ஊரையே அலைக் கழிப்பதும் அவர்களே! நம்மக்களில் ஒரு சில செல்வக் குடும்பங்களே அவர்களைப் பின்பற்றி அவ்வாறு செய்கின்றன. இவர்கள் விளக்கணி விழாவைக் கொண்டாடுவது போல் பொங்கலைக் கொண்டாடுவது இல்லை. மேலும் சிலை (மார்கழி) மாதங்களில் தெருவுக்குத் தெரு, மூலைக்கு மூலை ஒலி பெருக்கிகளைப் போட்டுக் கொண்டு பாவைப் பாடல்களை இப் பார்ப்பனப் பூசாரிகள் முழக்குவதும், கொட்டு முழக்கொடு கூடிப் பாடிக்கொண்டு தெருவலம் வருவதும் ஊரை இவர்களுக்காகவே ஆக்கிக் கொள்வது போல் இல்லையா? அக்கால் தேர்வுக்காக மாணவர்கள் படிக்கவும் இடையூறு நேர்வதை அரசும் கவனிப்பதில்லை. இந்தப் பாவைப் பாடல் வழக்கம் தேவைதானா? இந்தப் பாடலைப் பாடாத நாட்களில் விடிவதே இல்லையா? இவர்களின் இதழ்களும் விளக்கணி விழாவுக்காக மலர்கள் வெளியிடுகின்றனவே தவிர, பொங்கலுக்கு வெளியிடுவதில்லை.

பொது வாழ்க்கையில் இவர்களின் கட்டுப்பாடு தனி. இவர்கள் வாழும் பகுதிகளில் வேறு இனத்தவர்களுக்கு-குறிப்பாகத் தமிழர்களுக்கு வீடுகள் கிடைப்பதே அரிது. பல குடியிருப்புகள் கொண்ட பெரிய வீடுகளில் இவர்களைத் தப்பித்தவறிக் குடியமர்த்தினால் ஓரிராண்டுகளில் அங்குள்ள தமிழ்க் குடும்பங்களைச் சண்டையிட்டு வெளியேற்றி விட்டுப் பார்ப்பனக் குடும்பங்களாகவே பார்த்துக் குடியமர்த்திக் கொள்ளுதல் இவர்கள் பழக்கம். சில வீட்டுப்

பகுதிகளில் பிராமணர்களுக்கே வீடு விடப்படும் (To Let, only for Brahmins) என்று எழுதப் பெற்ற பலகைகள் தொங்கு வதைப் பார்க்கலாம். இவர்கள் வீடுகளில் பணியாற்றும் வேலைக் காரர்களை இவர்கள் என்றும் மதிப்பு வைத்தே அழைப்பதில்லை. அவர்களையும் சரி, பார்ப்பன அதிகாரிகளின் கீழ்ப்பணியாற்றும் பணியாட்களையும் சரி, அடே, அடி என்னும் சொற்களால்தாம் அழைக்கின்றனர். அவர்கள் வீடுகளில் உள்ள சிறுவர்களும் கூட அவர்களை வாய்கூசாமல் 'அடே, அடி' எனக் கூப்பிடுவதைக் கண்டு மனம் நோக வேண்டியுள்ளது. நிலாமண்டிலம் போகும் இக்காலத்தி லும் பிற இனத்தவரைத் தொட்டால் தீட்டு என்று கடுமையாகக் கருதும் பார்ப்பனர்கள் பெரும் பகுதியும் இருக்கத்தான் செய் கின்றனர். இவர்கள் வீடுகளில் பிற இனத்தவரை உள்ளேவிட இன்று கூட இசைவதில்லை. இராசாசியின் தீண்டாமைப் போராட்டத்தைப் பாராட்டும் தினமணிச் சிவராமன்கள் இவ்வகையில் எப்படி நடக்கின்றார்கள் என்பதைக் கண்டால், இவர்கள் பேசுவதும் எழுதுவதும் பொதுமக்களை ஏமாற்றுவதற்கே என்பது தெற்றெனப் புலப்படும். துக்ளக்கில் இவர்களுக்காகப் பரிந்து எழுதிவரும் அரைப் பிராமணஞன செயகாந்தனுக்குப் பார்ப்பன இனத்தவரின் முழுக்கேடுகளும் தெரிய வழியில்லை. அவர்களின் நச்சுத்தனத்தை இந்த இருபதாம் நூற்றாண்டிலும் அகற்ற வழியில்லையானால் அவர்களை எப்படித் தமிழ் இனத்தோடு ஒப்ப எண்ணுவது? தமிழ் பேசுவதால் மட்டுமே ஒருவன் தமிழன் என்று கருதப்பட வேண்டும் என்றால், ஆங்கிலம் பேசுகின்ற தமிழரை ஆங்கிலேயர் என்றன்றோ கருதுதல் வேண்டும்? ஆங்கிலம் பேசும் ஆப்பிரிக்கரைக்கூட ஆங்கிலேயர் என்று அவர்களே ஒப்புக்கொள்ளாத போது, தமிழ் பேசும் எவரும் எப்படித் தமிழர் ஆவார்? வேண்டுமானால் செயகாந்தன் என்னுடன் வரட்டும்; எனக்குத் தெரிந்த சமசுக் கிருத ஆசிரியர் பலர் தமிழர்களாய் உள்ளனர். அவர்களைப் பிராம ணர்கள் என்று அவர்கள் ஒப்புக் கொள்ளுகின்றார்களா என்று பார்ப்போம். சமசுக்கிருதம் பயிற்றும் ஆசிரியர் ஒருவர் தமிழராக விருந்தார் என்பதற்காக, அவரிடம் அம்மொழியைக் கற்க விரும்பாத பார்ப்பன மாணவர்கள் அத்தனைப் பெயரும் இந்தி வகுப்புக்குச் சென்றதை நானறிவேன். இப்பொழுதும் நிலைமாறி விடவில்லை. அண்ணாமலையில் தமிழ்ப்பேராசிரியராக விருந்த ஒருவர், வடமொழியில் பெரும்புலமை பெற்றிருந்தும் பார்ப்பனர் அவரைப் போற்றவில்லை.

பார்ப்பனப் பெண்களில் சிலர் நம் தமிழ இளைஞர்களை வறிதே வந்து மணந்து கொள்கின்றனர். பார்ப்பன வீடுகளில் பணியாற்றும் தமிழ இளைஞர் சிலர் பார்ப்பனப் பெண்களை விரும்பி மணந்து கொள்வதையும் பார்க்கின்றோம். எனினும் பார்ப்பன இளைஞர்கள் தமிழ்ப் பெண்களை மணந்து கொண்ட செய்தி மிகவும் அரியது. தமிழ இளைஞர்கள் பார்ப்பனப் பெண்களை மணந்து கொள்ளும் வகையில் பல அடிப்படைக் கோளாறுகளே கரணியங்களாக இருக்கின்றன. அவ்வாறு மணந்து கொண்ட பெண்களும் அவ்விளைஞர்களின் கொள்கைகளையும், போக்குகளையும் அறவே திசை திருப்பிவிட்டு விடுகின்றனர். இவற்றிற்குப் பல எடுத்துக் காட்டுகளைக் கூறமுடியும். பார்ப்பனத் தமிழினக் கலப்பு தவிர்க்க முடியாததே! அதனால் பார்ப்பனர்கள் தமிழர்களைத் தழுவிக் கொண்டனர் என்று கூறமுடியாது. மக்களினம் எல்லாம் ஒன்றுதான். அதை எல்லாரும் வரவேற்கவே செய்வர். ஆனால் கொள்கை வேறுபாடு போன்றவையே இன, மொழி வேறுபாடுகள். இனத்தாலும் மொழியாலும் ஒன்றின லன்றி ஒரு நிலத்தில் வாழ்கின்ற மக்கள் கூட்டத்தை ஓரினத்தவர் என்று கூறிவிட முடியாது. பார்ப்பனர்களை நாம் தமிழர்கள் என்று ஒப்பினாலும் அவர்கள் தம்மைத் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்வதில்லை. இன்னும் சமசுக்கிருதத்திற்கு அவர்கள் மதிப்பு வைப்பதுபோல் தமிழ் மொழிக்கு வைப்பதில்லை. எங்கோ ஒரு பாரதியார், பரிதிமாற் கலைஞர் இருந்தார் என்பதற்காகப் பார்ப்பனர் தமிழர்களாகிவிட அவர்களே அணியமாக இல்லை. சமசுக்கிருதத்தைக் கலக்காத தமிழை அவர்கள் ஒப்புக் கொள்வதேயில்லை. பார்ப்பனர்களில் தமிழுக்காக உழைத்தவர்கள் போல் ஆங்கிலேயர்களிலும், பிரஞ்சுக்காரரிலும், செருமானியரிலும், அரபியர்களிலும் தமிழுக் குழைத்தவர்கள் ஏராளமான பெயர்கள் உளர். அவர்களெல்லாரும் தமிழர்கள் என்று கூறிவிட முடியாது. இதைச் செயகாந்தன்கள் உணரவேண்டும். ஒரு மொழியில் புலமை பெறுதல் வேறு. ஒரு மொழியைத் தாய்மொழியாகக் கருதுதல் வேறு. ஒரு பெண் வேறொரு குழந்தையைத் தன் குழந்தை போலவே கருதி வளர்க்கலாம். ஆனால் அக்குழந்தை அவளைத் தன் தாய் என்று கருத வேண்டுமே. பார்ப்பனர்கள் தமிழைத் தம் தாய்மொழியாகக் கொள்ளாத வரை அவர்களைத் தமிழர்கள் என்று ஏற்றுக் கொள்ளவும் முடியாது; அவர்களும் தங்களைத் தமிழர்களாகக்கருதிக்கொள்ளவும் மாட்டார்கள். அவர்கள் அவ்வாறு தமிழைத் தங்கள் தாய்மொழியாகக் கருதினால்

அதில் கலப்பு நேர்வதைப் பொறுக்க மாட்டார்கள். சமற்கிருதத்தில் ஆங்கிலச் சொற்களையோ பிரஞ்சுச் சொற்களையோ கலந்து பேச விரும்பாத ஒருவன் தமிழில் அவ்வாறு கலப்புச் செய்வதை விரும்பு கின்றான் எனில், அவன் தமிழைத் தாய்மொழியாகக் கருதுகிறான் என்று எப்படி ஒப்புக்கொள்வது? செயகாந்தன் போன்றவர்களுக்குத் தமிழ்மொழியைத் தூய்மையாக எழுதத் தெரியாத கரணியத்திற்காக அவர் எழுதுவதுதான் தமிழ் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டுமா? அவ்வாறு ஒப்புக்கொண்டால் சென்னையில் உள்ள ஓர் உயர் விடுதியின் பரிமாறி(Butlor)பேசும் ஆங்கிலத்தை யும் ஆங்கிலம் என்றுதானே ஒப்புக்கொள்ள வேண்டும். 'காவிரி ஜலம்' 'கலாச்சார பலவீனம்' 'பாரத ஞானபூமி' என்பவற்றைத் தமிழாகக் கொள்ள வேண்டுமானால், 'பானை வாட்டர்' 'ஹிருதய வீக்னஸ்' பாரத நாலெட்ஜ் பூமி' என்பவற்றை ஆங்கிலமாகக் கொள்ளவும், 'வாய்மை மேவ ஜெயதா' 'பண்பாட்டு ஞானபீட' என்பவற்றைச் சமசுக்கிருதமாகக் கொள்ளவும் முன்வரவேண்டும்! தமிழ்மொழியை மட்டும் அவர்கள் வந்து ஒண்டு வதற்குரிய குட்டிச்சுவராக்கலாம்; அவர்கள் மொழியான சமசுக் கிருதத்தை மட்டும் சிதைக்கக் கூடாது என்பதில் என்ன நடுநிலை உள்ளது? மொழித்தூய்மையும் இனத்தூய்மையும் எல்லா மொழிக்கும் இனத்துக்கும் தானே! மொழியிலும் இனத்திலும் தூய்மை பார்க்க வேண்டா என்பதும் எல்லா மொழிக்கும் இனத்துக்குமான பொது அறமாகத்தானே இருத்தல் வேண்டும். பார்ப்பனர்களும், பார்ப்பனர்களுக்குச் சார்பானவர்களும் தங்கள் தங்கள் கருத்துகளைத் தங்களுடைய மனம் போனவாறு எழுதவும், மக்களிடையே எளிதில் பரப்பவும் ஏராளமாக வாய்ப்புள்ளது என்பதற்காகவே, பிறர் கருத்து வலி விழந்துபோய் விட்டதாகக் கருதிவிட முடியுமா?

இந்தியாவில் உள்ள 79 பல்கலைக் கழகங்களில் 63-இல் சமசுக்கிருதம் பயில வாய்ப்பிருக்கின்றது. தமிழ் மொழியைச் சொல்லித்தர 12 பல்கலைக் கழகங்களே உள்ளன. தமிழைவிடச் சமசுக்கிருதம் பேசுபவர்கள் மிகுதியாக உள்ளனரா? இந்தியாவில் நாலரைக் கோடி மக்கள் தமிழ் பேசுகின்றனர். (சரியாகக் கணக்கிட்டால் ஏழு கோடிக்குக் குறையாது. கணக்கெடுப்பவரிலும், கணக்குப் பார்க்கும் அதிகாரிகளிலும் பெரும்பாலோர் தமிழர்க்கு மாறானவர்களாக இருப்பதால் இத்தகைய புள்ளி விளத்தங்கள்

சரியாகவே இருப்பதில்லை.) சமசுக்கிருதம் பேசுபவர் ஏறத்தாழ ஐநூறு பேர்களே! இந்த ஐநூறு பேர்களின் மொழியைக் கற்றுக் கொடுக்க 63 பல்கலைக் கழகங்கள்! நாலரைக்கோடி மக்கள் பேசும் மொழியைக் கற்பிக்க 12 பல்கலைக் கழகங்கள். இதுதான் தேசிய மொழித் திரு(ட்டு)விளையாடலோ?

மேலும் தமிழ் மொழிப் புலமையிலும் வேறுபாடு காட்டப் பெறுகின்றது. வடமொழி பயின்றவனுக்கு ஒரு மதிப்பு. தமிழ் மொழி பயின்றவனுக்கு ஒரு மதிப்பு. தமிழே தெரியாத சமற்கிருதப் பார்ப்பனப் புலவராகிய சுனிதி குமார் சட்டர்சி போன்றவர்கள் தமிழுக் கதிகாரிகள்! தமிழையும் பிற திரவிட மொழிகளையும் சமசுக் கிருதம், இலத்தின், கிரேக்கம், சாக்சானியம் போன்ற மொழி யிலக்கணங்களையும் பழுதறக் கற்ற பாவாணர் போன்றவர்கள் வெறும் தமிழ்ப் புலவர்கள்! இந்த வேறுபாட்டு நிலை உள்ள வரை பார்ப்பனர்களைத் தமிழர்களோடு மொழி, இன நிலையில் இணைத்துக் கருத முடியுமா?

மொழித்தூய்மையைப் பார்ப்பனர்களும் அவர் அடிவருடிகளும் ஒப்புக் கொள்வதே இல்லை. வெளிநாடுகளிலிருந்து தமிழ்நாட்டுக்கு மொழிகற்க வரும் மாணவ அறிஞர்களிடம் தங்களுக்குள்ள மேனிலை வாய்ப்புகளால் பிறரினும் முந்திக்கொண்டு போய்த் தாங்கள் பேசுவதே மொழியென்றும், எழுதுவதே எழுத்து என்றும் அவர்களிடம் இட்டுக்கட்டி உரைப்பதும், ஆனந்தவிகடன், குமுதம், கல்கி, தீபம் முதலிய தமிழ்க்கொலை செய்யும் ஏடுகளையே இலக்கிய ஏடுகள் என்று அவர்களிடம் காட்டி விதந்துரைப்பதும், அம்மாணவ அறிஞர்களின் பரிவால் மொழி ஆய்வுக் கென்றும் இலக்கிய வளர்ச்சிக் கென்றும் அமெரிக்கா, செருமணி முதலிய மேலை நாடுகளினின்று அனுப்பப் பெறும் அளவிறந்த பொருளுதவிகளைத் தாங்களே அமுக்கிக் கொள்வதும் அன்றாட நடைமுறைகளாக விருக்கின்றன. இத்துறையில் பார்ப்பனர்கள் செய்யும் கள்ளத்தனங்களுக்கும், முல்லை மாறித்தனங்களுக்கும் ஒரு வரம்பே கிடையாது. சாகித்திய அகாடமி என்றும் சங்கீத நாடக அகாடமி என்றும், நேருபரிசு, கலிங்காபரிசு, ஞானபீட பரிசு என்றும் பலவகையிலும் தரப்பெறுகின்ற அறிவியல், கல்வி, இலக்கிய, கலைப் பரிசுகள் யாவும் இவர்கள் இனத்தவர்க்கே தேடிப் பிடித்துத் தரப் பெறுகின்றன. ஓரிரண்டு பரிசுகள் தமிழர்களுக்குத் தரப்பெறுவதானாலும் அவர்களின் அடிமை களுக்கே தரப் பெறுகின்றன. இலைகளிடைக் காய்போல் எங்கோ ஒரு பரிசு இவர்களின் கொள்கைக்கு மாறானவர்களுக்குத் தரப்பெற நேர்ந்தால், பிறர் நகைக்குமளவிற்கு நூல்களைத் தேர்வு செய்து கொடுக்கின்றனர். பாவேந்தர் பாரதிதாசன்எழுதிய குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, தமிழியக்கம் போன்ற வாழ்வியல்,

இயற்கை, சீர்திருத்தம் ஆகிய கூறுபாடுகளைக் கொண்டனவும், நோபல் பரிசுக்கும் தகுதி பெற்றனவும், அவர் புலமைக்கே கொடு முடி போன்றனவுமான நூல்கள் இருக்க, அவர் நூல்களில் மிக எளியதும், அவர்தம் பாவியல் புலமைக்கு வேறுபட்ட நாடகவடிவில் உள்ளதுமான **பிசிராந்தையார்** என்னும் நூலுக்கு, அதில் அவரின் தலையாய கொள்கையான ஆரிய மறுப்புக் கருத்துகள் ஒன்று மில்லை எனபதற்காகவே **சாகித்திய அகாடமி பரிசு** கொடுக்கப் பெற்றுள்ளது. இது தமிழர்களையும் அவர்தம் ஆற்றல்களையும் இருட்டடிப்புச் செய்கின்ற வஞ்சகமான செயலாகும் என்பதை எல்லாரும் எண்ணிப்பார்கக வேண்டும் பாரதியாரை விடப் பாரதிதாசன் இலக்கியத்திறனிலும், பாவன்மையிலும் எவ்வளவோ சிறப்புற்று விளங்கிபும, அவர் ஒரு தமிழர் என்பதாலும், பாரதியார் ஒரு பார்ப்பனர் என்பதாலும் காட்டப் பெறும் வேறுபாடுகளும், போற்றப் பெறும் வகையில் உள்ள மாறுபாடுகளும் கொஞ்ச நஞ்சமல்ல.

மேலும், தேசிய விருதுகளாகிய **'பாரத ரத்ன'**, **'பத்மவிபூஷண்' 'பத்மபூஷண்'** போலும் உயர்ந்த பாராட்டு களும் பெரும்பாலும் அவா இனத்தவர்களுக்கும், வடநாட்டவர் களுக்குமே கொடுக்கப் பெறுகின்றன. எங்கேனும் தகுதிவாய்ந்த தமிழர்கள் இருந்தால் அவர்களுக்கு அவ்வரிசையில் கடை நிலையதான **'பத்மஸ்ரீ'**யே தரப் பெறுகின்றது. இதுவரை மிகவுயர்ந்த விருதான **'பாரதரத்ன'** வைப் பெற்ற பதினைவரில் ஒருவரும் தமிழரல்லர். தமிழ் பேசுபவராகக் கருதிக் கொடுக்கப் பெற்ற திரு. இராசாசியும் பிராமணரே. மற்றுத் தமிழர் தொடர்புள்ள திரு. இராதாக் கிருட்டிணன் அவர்களும் சி. வி. இராமனும் கூட பிராம ணர்களே. இந்தியா விடுதலை பெற்ற 25 ஆண்டுகளில் தமிழர்கள் அனைவரிலும் **பாரதமணியாகத்** திகழத்தக்கவர் ஒருவரும் இலர் என்று அவர்கள் கருதுவார்களானால், இந்தத் தமிழர்களும், தமிழ் நாடும் வடநாட்டுத் தலைமையின்கீழ் இருந்துதான் ஆக வேண்டும் என்பதில் என்ன கட்டாயம் இருக்கின்றது? (தொடரும்)

பாவலரேறு.

தமிழன் பிறந்தகம் குமரிக் கண்டமே!

சிலைத் திங்கள் 17-ஆம் நாள் (31—12—72) தஞ்சையில் நிகழ்ந்த உ.த.க. தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக் கருத் தரங்குச் செய்திகள் அடுத்த இதழில் இடம் பெறும்.

பாவாணர் அவர்களின்

தமிழர் மதம்

தமிழன்பர் ஒவ்வொருவரிடமும் கட்டாயம் இருக்க வேண்டிய நூல்.

விலை 5 உருபா

கிடைக்குமிடம்: தே. மணி

ஆ.1135-2-ஆம் மேற்குக் குறுக்குச்சாலை, காட்டுப்பாடி விரிவு(வ. ஆ)

இனித் தமிழாவது தனித்தமிழேயென, எங்கும் எவர்க்கும் இனிது விளக்கிடத், திங்கள் தோறும் உங்கள் கையுறும் தென்மொழி யுணியில் இன்னும் ஓரிதழ்!

தீச்சுடர்

சிறப்பாசிரியர் :

பாவலர் பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்: க. வெ. நெடுஞ்சேரலாதன்

தனியிதழ் 00-25 ஆண்டுக் கட்டணம் 3-00

○ தி. பி. 2004. சுறவத் திங்கள் முதல் வெளிவருகிறது.

○ இதழுக்கு 50 காசு மேனி முன்பணங்கட்டும் முகவர்கள் எழுதுக!

தீச்சுடர், மதுரை-10

"வலம்புரி"

ஆசிரியர்: புலவர் இறைக்குருவனார்

0 தமிழுக்கு ஆக்கமும் தமிழர்க்கு ஊக்கமும் அளிக்கும் செந்தமிழ்த் திங்களிரிதழ். தனியிதழ் 0-25 காசு

ஆண்டுக்கட்டணம் 6 உருபா அரையாண்டுக் கட்டணம் 3 உருபா.

விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க.

வலம்புரி

மதுரை-10.

'தமிழம்'

(திங்களிதழ்)

ஆசிரியர்: உலக முதல்வி

0 தென்மொழி யணியில் சிறப்புடன் வெளிவந்து கொண்டுள்ளது!

தனியிதழ் 50 காசு ஆண்டுக்கட்டணம் 6 உருபா

இன்றே உறுப்பினர் ஆகுங்கள்

'தமிழம்', 17, நாகப்ப முதலி தெரு, சென்னை-2.



மக்களவை

O: 167: தென்மொழியும் நின்று விட்டால்...! ஐயகோ, தமிழா! நீ வாழ வழியுண்டா?

மாண்புசால் ஐயா,

கனிந்த கைகூப்பு. உங்களின் விடுதலை முழக்கம் என் செவிக் கெட்டியது. உடலில் ஒரு மின் ஓட்டம் பாய்ந்தது போல் துள்ளி எழுந்தேன். ஆனால் பொருளியல் எனும் தொய்வக்வுரை என்னை மூடிவிட்டது. தாங்கள் தென்மொழியை நிறுத்தப் போவதாகவும் அது தமிழர்க்கு இனிப் பயன் தருமா என அஞ்சுவதாகவும் இதழ் வழிக்கண்ட என் கண்களுக்கு இனிக் காட்டுவது எதுவோ? தமிழின் உயிரோட்டத்தைக் காட்டும் தென்மொழியும் நின்று விட்டால்?! இக்கால் தண்டமிழ் நாட்டில் குழுமி இருக்கும் பேரிருளை எந்த ஓர் ஆரியப் பூதம் தீப்பொறி பறக்க விடுவதாக அச்சுறுத்தப் போகிறதோ? அதைக்கண்டு தாங்கள் எப்படித் தாங்கப் போகிறீர்கள்? தண்டமிழ் நடையில் கைவைத்து, அதை ஏளனம் செய்யத் துடித்துக் கொண்டிருக்கும் பார்ப்பனர்க்கும் ஆரிய அடிவருடிகளுக்கும் தங்களின் இதழ் நிறுத்தம் பெறற்கரும் வாய்ப்பை நல்கப் போகிறது.

சிறியதெனினும் ஓரிதழ் ஒளிஞாயிருக மலர்கின்றது என்ற ஒரு காரணியத்தால் தான் பார்ப்பனர்கள் வண்டமிழை, இதுதான் என இனஞ்சுட்டாமல் நடுங்குகிறுர்கள் என்பது உங்களுக்குத் தெரியாத ஒரு செய்தியன்று.

மாந்தர்கள் குறிப்பாக வறுமையில் வாடித் தவிக்கும் நம் தமிழர்கள் தங்களது வயிற்றை நாடித்தான் ஓட வேண்டி உள்ளது. தூய தமிழ் பேசுபவர்களுக்கு உணவு வழங்கப்படும் என்ருல் ஒன்றும் அறியாதவர்கள் கூடத் தமிழ் பேச முன்வருவர். 'பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்.' இந்நிலையில் தனது கற்பைக்கூடப் பெரிதாக மதியாத நிலை இந்நாட்டில் ஏற்பட்டிருக்க, மொழியைப் பற்றி எண்ணுவதற்கு ஏது நேரம்? பொருள் என்ற ஒரு முதலை மாந்தனின் தூய அறிவு, உணர்வு என்பனவற்றைஎந்நேரமும் விழுங்கியவண்ணம் இருக்கிறது.

திரை அரங்கிற்குச் செல்பவர்களிடம் தென்மொழியின் கோள்கள் எடுபடாததற்குக் காரணியம் வறுமையில் வாடும் மக்கள் ஏதோ ஒரு மெல்லிசை வழி தங்களின் துயரங்களை மறக்கப் பாடு படுவதுதான். நேர்பாடுடைய மாந்தனைக்குமுகாயம் கீழோனாகக் கருது கிறது. எளிமையான உடை அணிபவன் அறியாமையில் வாடுபவ னாகக் கருதப்படுகிறானே அன்றி, வறுமையில் வாடுபவனாகக் காணப் படுவதில்லை. ஏனெனில் மக்களிடத்தில் உண்மை மறைந்துவிட்டது.

பொருளீட்டக் கற்றவனே கடவுளாகி விடுகிறான். அவனைப் போற்றுகின்றனர். மொழி பேசத் தெரிந்தவன் மக்களை மதிமயங்க வைத்துவிட்டுத்தன்னுடைய தேவைகளைப்பெருக்குவதில் முனைகிறான். நாட்டின் பொருளியலைப்பற்றி எண்ணும் அரசியலறிஞர் எவரும் நம்மிடையே தோன்றவில்லை. மொழியைக் காட்டிப் பதவிக்கு வந்த அரசு மொழியை வெறுப்பதைத் தெரிவித்தும், தெரியாதவர்கள் பலர் உள்ளனர். பொதுப் படையாக அன்று முதல் இன்று வரை மக்களை நம்பவைத்துக் கழுத்தறுக்கும் ஆட்சிகளே நடைபெற்று வருகின்றன. மக்கள் அன்றும் இன்றும் எதிர்நோக்குவது தமது தேவைகளையே.

மொழி அவனுக்கு மிகவும் எளிதான பொருளாகிவிட்டது. மொழி இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன? தான் உழைக்காமல் உண்ணவேண்டும். பிறர் ஏமாற்றம் அடைந்தால் அதில்தானும் ஒருவனாக இல்லாது, தனது ஆளுமையால் ஏமாற்றி உண்ண வேண்டும் – என்ற உணவுச் சிக்கலே நிறைந்து கிடக்கின்றது. மொழித்துறையில் ஆய்வு நடத்துவோரிலும் மிகுந்த வருவாயினை ஈட்டுபவனின் கொள்கைகள் தாம் மக்கட்குத்தேவை! கீழ் நிலையான சொற்களைப் பணம் படைத்தவனோ அழகான ஆடை அணிந்தவனோ கூறினால் அவையே போற்றத் தக்கனவாக மாறி விடுகின்றன. பொய் வாழ்க்கையை நாடி ஓடும் குமுகாயத்திற்கு உண்மை வாழ்க்கையின் நிலைபுரிவதில்லை. திடும் திடுமென மாறும் வாழ்வுகள் மலிந்திருப்பதால் மக்களின் உண்மையான உணர்வுகள் தட்டி எழுப்பப்படவில்லை.

நாத்திகம் பேசியவர் கடவுளைத் தொழுகிறார். கடவுளைத் தொழுதவர் நாத்திகம் பேசுகிறார். பொதுவுடைமை பேசுகிறவர் தனி உடைமை வேண்டும் என்கிறார். தனி உடைமை பேசியவர் பொது உடைமை வேண்டும் என்கிறார். தொழிலாளர்களிடம் முதலாளிகளைத் திட்டுகிறார். காரணியம் மக்களின் பொருள் வேட்கை அன்றிப் பிறிதென்ன ?

குமுகாயத்தைத் திருத்தத்தான் நாம் முயலவேண்டும்; அடிமைத் தனங்களைப்பற்றித் தீப்பொறிபறக்க எழுதவேண்டும்; மேடையில் முழக்கமிட வேண்டும்; குமுகாயக் கேடுகளைக் கண்ட நாம் குமுகாய நாகரிகத்தில் (ஆடை) விழாதிருக்க வேண்டும். தங்களுடன் முழுக்கால் சட்டை போட்டிருப்பவன் பேசுங்கால் உங்கள் மனநிலை இருப்பதுபோல் அரையாடையை – வேட்டியைக்கட்டியவன் பேசும் போது இருப்பதில்லை. கரணியம் அவனை நீங்கள் உயர்த்தா விட்டாலும் தான் உயர்ந்தவனுக் கருதுகிற அவனை நீங்கள் வெறுக்கத் தயங்குகிறீர்கள்.

பல்லாயிரக்கணக்கான மக்களின் முகாமையான நோக்கம் உணவே! அவர்கள்தாம் உண்மைத் தமிழர்கள்! அவர்கள் மேல் நிலைக்கு வரவில்லையே. இதுவரை மேல் மட்டத்தில் இருப்பவர்கள் எல்லாரும் பார்ப்பனரும் அவர் தம் மாணுக்கர்களும் தாம்! பெரியாரின் அறிவுரையோ, மற்றவர்களின் அறிவுரையோ மக்களின் காது களில் கேட்டால் அவர்களுக்கு மொழியைப்பற்றிக் கவலை இல்லை.

நாள்தோறும் இறைவனை வழிபடுபவர்கள் பார்ப்பனரே! மற்றவர்கள் குறைவு. இதற்காக ஓர் இயக்கம்! அதை வால் பிடிக்கவும் ஒரு குழு. கிழமைக்கு ஒருநாள்தான் கடவுளின் நிலை பற்றி எண்ணுபவர்களிடம் கடவுளைப்பற்றி மிகுத்துப் பேசிப் பயன் என்ன?

தொழில் துறையையும் மொழியையும் இணைக்கும் ஓர் இயக்கமே தேவை. பொருளை ஈட்டும் வழிகளை, உழைக்கும் வழிகளை விளக்கி வரையும் எதுவும் வாழ்வு பெறும். மக்கள் விரும்புவது தூய்மையைத் தான். ஆனால் அவர்களுக்கு எளிமையும் தேவை. எளிமை இல்லா தனவற்றை அவர்கள் நாடுவது இல்லை. எனவே பழக்க வழக்கங்களை அறுதியிட்டு மொழி, பொருள் இவற்றுள் கட்டுப் பாடாக வாழுபவர்கள் அனைவரும் ஒரே ஆயமாக இருத்தல் வேண்டும். இதோ பாருங்கள்...(மடலுடன் அரையம்மண உடையுடன் அமர்ந் திருக்கும் பெண் ஒருத்தியின் படமிட்ட ஓரிதழின் மேலட்டையை விடுத்துள்ளார்) இதுபோன்ற இதழ்கள் நம்மிடையே தீப்போல் பரவி வரும் இவ்வேளையில் தென்மொழியும் நின்று விட்டால்...! ஐயகோ தமிழா, ஏன் இந்தக் கொடுமை? நீ வாழ வழியுண்டா?

—கொ. சி. வேலுச்சாமி, மேட்டூர்அணை-4

வி: 168: புரட்சிக் காலத்தில் இணைவேன்!

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய ஐயா, வணக்கம்.

தங்களது தூய தமிழ்த் தொண்டால் உளம் கவரப்பட்டவர்களில் நானும் ஒருவன். கல்லூரி வாழ்க்கையில்தான் தங்களது உயரிய கொள்கை இதழாம் தென்மொழியைக் காணும் பேறு பெற்றேன். அது முதற்கொண்டு தங்கள்பால் சிறிது சிறிதாகக் கவரப்பட்ட யான் இன்று தங்களையே என் தலைவராகவும், வழிகாட்டியாகவும் வரித்துளேன் என்றால் அது மிகையன்று. தங்கள் கொள்கைக்காக என்னையே தங்களிடம் முற்றிலும் அளிக்க அணியமாயுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தங்களது தமிழக விடுதலைப் போரில் முன்னணியில் நின்று தொண்டாற்றத் துடித்துக் கொண்டிருக்கிறேன். தங்களின்கீழ் தமிழுக்காகத் தொண்டாற்றுவதை என் பிறவிப் பயனாகக் கருதுகிறேன். மாநாட்டிற்குப் பிந்திய தென்மொழி இதழ்வழி தங்கள் உளம் சிறிது சோர்வடையும் வகையில் நிகழ்ந்தமை கண்டு மிக வருந்துகிறேன். அவ்வுயரிய மாநாட்டில் கலந்து பயன்பெறாமல் இங்கு வர நேரிட்டமைக்காகவும் மிகமிக வருந்துகிறேன்.

அடுத்த தென்மொழி என்று வரும் என்றெதிர் நோக்கிய வண்ணம் நாடொறும் கழிக்கிறேன். பழைய தென்மொழி இதழ்களைத் திரும்பத் திரும்பப் படித்து ஏக்கத்தைத் தணித்துக் கொள்கிறேன். நான் எளிய குடும்பத்தில் தோன்றியவன். இன்றென் பெற்றோரும் தம்பியரும் தங்கள் நல்வாழ்விற்கு என்னை எதிர்நோக்கிய வண்ணம் உள்ளனர். என் தம்பியரை மேனிலைக்குக் கொண்டு வந்து (என்) பெற்றோர்க்கு உற்றதுணையாக அமைக்க இன்னும் சில ஆண்டுகள் ஆகும். அதுகாறும் என் முழு ஆற்றலையும் தென்மொழிக் கொள்கைக்குச் செலவிட முடியாதே யென்றெண்ணிக் கவலுறுகிறேன். ஏனெனில் அவர்கள் என்னை மிக எதிர்பார்த்து ஆளாக்கியுள்ளார்கள். உடனே இவ்வலுவலை நான் துறந்துவிட்டு, தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டில் (முழுவதுமாக) ஈடுபட்டால் அஃது அவர்கட்குப் பேரிடியாக இருக்கும். என் குடும்பத்தை நன்னிலைக்குக் கொணரும் வரை இவ்வலுவலிலேயே தொடர்ந்திருக்கவும், வேலை போக எஞ்சிய நேரங்களில் நமது கொள்கைக்காகப் பணியாற்றவும் இசைவு வழங்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அஃதாவது என்னைப் போன்ற இக்கட்டான நிலையிலிருக்கும் அரசு

நிலை ஊழியர்களை, நமது செயற்பாட்டுத் திட்டத்தின் இறுதிக்கட்ட ஊழியர்களாக அமையுங்கள், எப்படியும்போராட்டக் (புரட்சிக்)காலத் திற்கு முன் தங்களுடன் முழு மூச்சாகப் பணியாற்ற இணைந்து கொள்வேன் என்பதைத் தெரிவிக்கிறேன். தங்களை என் வழிகாட்டி யாக, தலைவராகப் பெறுவதற்குப் பெரும் பயன் செய்திருக்கவேண்டும். இனி, தங்கள் வழியே என்வழி என்று உறுதி கூறிப் புறப் படுகிறேன். அவ்வழி காடாக இருப்பினும் சரி; மேடாக இருப்பினும் சரி; முள் நிறைந்த புதர்க் கூட்டமாக இருப்பினும் சரி; மலர் நிறைந்த சோலையாக இருப்பினும் சரி; உறுதியாகப் பின் தொடர்வேன்; இறுதி வரை பின் தொடர்வேன். வணக்கம்.

தங்கள் உண்மையுள்ள விடுதலை இயக்கத் தொண்டன்,
—குன்னத்தூர் தம்பி.
பொறியியல் மேற்பார்வையாளர். காளிக்கோட்டம்-700004.

வி: 169. ஆசிரியவுரை எழுதியவர் தாங்களா?

தென்மொழி இதழில் (சுவடி: 10, ஓலை:-5-6) ஆசிரியவுரையைக் கண்ணுற்றேன், கலங்கினேன். "தாங்களா!" என்று திகைத்தேன். 'ஆம்' 'தாங்களேதாம்' என்று தெளிந்து வருத்த முற்றேன். 'கலைஞரின் கைகளை வலுப்படுத்துக' என்று கூறியிருக்கின்றீர்கள். முன்பு இதே 'அருட்செல்வரை'க் கண்டித்து எழுதி வந்த தாங்கள் இன்று புரந்து கொள்ள முனைந்து விட்டீர்கள். இனியும் அப்படித் தான் தென்மொழி செயல் படும் என்றும் கூறிவிட்டீர்கள். வரவேற் கின்றோம். ஆனால் நீங்களேதாம் ஆசிரியவுரையில் (சுவடி-9 ஓலை-2) "மொழிச் சிறப்பையறியாத ஒருவனோ, மொழி நலத்தைப் பேண விரும்பாத ஒருவனோ ஆட்சித்தலைமையுறும் காலத்தி லெல்லாம் ஒரு நாட்டின் மொழி சீரழிவதும், மொழியின் சிறப்பையும் வலிவை யும் உணர்ந்தவன் அரசு வலிமை பெறுங் காலத்தி லெல்லாம் அது சிறப்புற்று வளர்வதும், வரலாற்று நிகழ்ச்சிகளாக இருந்து வந்திருக் கின்றன. "தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ் நாட்டின் முதலமைச்சாய் வருதல் வேண்டும்" என்னும் பாவேந்தர் கொள்கையில் 'அறிந்த' என்னுமல் 'ஆய்ந்த' என்ற சொல்லைப் பெய்தமைக்கு ஆழ்ந்த பொரு ளுண்டு" என்று எழுதியிருக்கின்றீர்கள். ஏன்? அன்று "மகாராட்டிர அரசு 'சமற்கிருத-ஆங்கில' அகர முதலியை வெளியிட உதவி செய் கின்றது; மற்றும் நடுவணரசும் துணை செய்கின்றது" என்று அறிந்த

தால் நம்முடைய அரசு இவ்வாறு உதவி செய்யவில்லையே என்று தூற்றினீர்கள். அதற்காக மிக்க மகிழ்வுற்றேம். ஆனால் இன்று!

அவ்வாறே தென்மொழி இதழ் (சுவடி–9, ஓலை-1) ஆசிரியவுரையில் 'வங்காளம் தரும் பாடம்' எனும் பாடலில்

"திண்ணையில் படுத்துத் திரவிடங் கேட்ட
அண்ணாத் துரைகள் அடங்கிய பின்னரும்"

"அமைச்சர் பதவியில் அமர்ந்ததும் அவரவர்
நமைச்சலை அடக்கவே நாழிகை இன்றிப்
பட்டந் தாங்கவும் பட்டுடை யேற்கவும்
கொட்டம் அடிக்கவும் கொடுப்பதை வாங்கவும்
நேரம் இன்றி—நினைவின்றி—அலைகையில்"

என்று குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் சென்ற இதழில் (சுவடி-10, ஓலை–5-6) ஆசிரியவுரையில் எம். சி. இரா. எழுப்பிய குற்றச்சாட்டுகளுக்கு 'நேருக்குநேர்–சொல்லுக்குச் சொல் விடைகூறத் தென்மொழியால் முடியும், என்று அறை கூவல் விடுத்துள்ள தாங்கள் அன்று அமைச்சர்கள்மீது குற்றச்சாட்டுகளை அடுக்கியபோது, அவற்றுக்கும் சேர்த்துத்தான் இன்று தாங்களே நேருக்குநேர்–சொல்லுக்குச் சொல் தொடுத்துக் கூறப்போகின்றீர்கள். வருந்துகின்றேன். அதே இதழில் தான் 'அண்ணாமலைநகர் அதிர்ச்சி' என்ற பாடலில் கலைஞர் பண்டாரகர் பட்டம் பெற்றதைச் 'சுண்டல் கடலை'யாக உவமை கூறினீர்கள். அன்று ஏனே தமிழன் ஒருவன் பட்டந்தாங்கியது பொறுக்காத தாங்கள் இன்றுவது 'தமிழன்தான் கலைஞர் அருட்செல்வனுர்' என்பதனை ஏற்றுக் கொண்டதற்கு மகிழ்வெய்துகின்றேன்.

இது போன்றே தாங்கள் தென்மொழி இதழில் (சுவடி–9 ஓலை 9–10) 'யாருமில்லை; நாங்கள்தாம்' என்ற ஆசிரியவுரையில், கலைஞரின் மாநிலத்தன்னாட்சியை இகழ்ந்துரைத்தும், 'இனியும் கலைஞரை நம்பிப் பயனில்லை' என்றும் கூறிய தாங்களேதாம் இன்று 'தமிழர் தன்னுரிமை பெறவேண்டின், தமிழகம் விடுதலைப் பாதையை நோக்கி இன்னும் முடுக்கமாக நடையிட வேண்டின், கலைஞரின் கைகளை மேலும் வலுப்படுத்துக' என்று புகன்றுள்ளீர்கள். அஃது எவ்வகையில் பொருந்தும். நாங்கள் குழப்பத்தில் குழம்புகின்றேம். சேர நாட்டையும்

தமிழ்நாட்டின் ஒரு பகுதி என்று கூறிவிட்டு இன்று 'மலையாள நடிகர்' என்று புகலுவது, உண்மையில் தாங்கள் மறந்து விட்டீர்களா? அல்லது மறைத்துவிட்டீர்களா என்று தெரியவில்லை. எதையோ கூறவந்து வேறு எதையோ கூறுவது போன்று செயலலிதாவையும் மஞ்சுளாவையும் இழுப்பது, 'தங்களுக்குத்தாம் அரசியல் தெரியும்' என்று கூறுவது போன்று உள்ளது. [இவ்வாறு கூறியதற்கு மன்னிக்கவும், வேறு வழி எனக்குத் தெரியவில்லை]. என்றுமே தி. மு. க. பிடிக்காமலிருந்ததில்லை, என்று கூறுகின்ற தாங்கள் அன்று இலக்குவனாரின் மகனார் மறைமலையவர்கள் 'அரசைப் பாராட்டாவிடினும், தூற்றாது இருந்து உறவு கொண்டு செயல் படுவோம்' என்று மடல் வரைந்த போது எத்தனை அன்பர்கள் தங்களுக்குப் பரிந்துரைத்தார்கள், தாங்கள் எவ்வாறு 'நெஞ்சை' நிமிர்த்தினீர்கள் என்பது தென்மொழி அன்பர்களுக்குத் தெரியும்.

ஆரியக் கூத்தாடிகளுடன் சேர்ந்து தி. மு. க. அரசை அழிக்க முற்படுகின்றார்கள் என்று கூறும் தங்களை நோக்கி நான் இன்று "தாங்கள்தாம் ஆரிய கூத்தாடிகளுடன் சேர்ந்து விட்டீர்கள்" என்று குற்றம் சாட்டுகின்றேன். திகைக்காதீர்கள். இன்று துக்ளக்கும், தினமணிக்கதிரும் கலைஞருக்குப் பரிந்துரைக்கின்றன. அந்த வரிசையில் இன்று தாங்களும் சேர்ந்து விட்டீர்கள். அவர்களுடன் சேர்ந்து கைகொடுக்காவிடினும் அவர்களின் கருத்துகளுக்கு வலுவூட்டுவதே தாங்கள் ஆரியக் கூத்தாடிகளுடன் சேர்ந்து விட்டீர்கள் என்பதற்குப் போதுமானதாகும். எனவே நாங்கள் விழைவதெல்லாம் மறைமலையாரும், மற்றும் பலரும் கூறும் போது, தி. மு. க. வைப் புரந்து காக்காத தாங்கள், இன்று புரந்து காப்பதன் தேவை என்ன என்பதே? இதுவரை நான் கூறியவை யாவும் தங்களின் கருத்துகளைச் சாடியவையே தவிர தமிழகத்தின் மீது அன்பு கொண்டவர் என்ற 'பெருஞ்சித்திரனார்' மீதல்ல. அவர் என்றும் எங்கள் நினைவில் நின்று 'தமிழக விடுதலை'க்குப் பாடு படுவார். நான் ஏதேனும் பிழைபடக் கூறியிருப்பின் பொறுத்தருள்க. நன்றி. —இல. இராமதாசு—காஞ்சிபுரம்.

ம: 170: தங்களுக்கு அரசியல் சுன்னந்தான்!

தென்மொழி சுவடி: 10, ஓலை: 5-6ஐப் பார்த்தேன். "அருட் செல்வர் ஆட்சியை அரணிட்டுக் காக்க" என்றும், "கலைஞரின்

கைகளை வலுப்படுத்துக'' என்றும் எழுதியதைக் கண்டு அதிர்ச்சியும் வியப்பும் மேலிட இதை எழுதுகின்றேன். இன்றைய நாள்வரை தி.மு.க. அரசு முழுத்தமிழர் ஆட்சி அன்று என்றும், பாதித் தமிழர் ஆட்சி என்றும் கூறியதை மறந்து மனம் மாறுபட்டு இதுவே தமிழர் ஆட்சி என்று கூறுவது வியப்பினும் வியப்பாம். தி. மு. க. பிளவு ஏற்படு முன் இதைக் கூறியிருந்தீர்களெனின் எவ்வளவு தமிழர்கள் தங்கள் 'விடுதலை மாநாட்டில்' கலந்து கொண்டிருப்பார்கள்! எவ்வளவு எளிதாகத் தன்னாட்சிக் கொள்கை பரவியிருக்கும்! என்பதை நினைக்கும் பொழுது இன்று வருத்தம்தான் மேலிடுகின்றது. தாங்கள் தி. மு. க. விற்குக் கொடுக்கும் இந்தத் துணை உங்களுக்கு வெற்றியைத்தர உதவப் போவதில்லை. தி. மு. கவிற்குத்தான் வெற்றி. இது பின்னால் உங்களுக்கு விளங்கும். இவ்வளவு நாள் கலைஞரைத் தூற்றிய தாங்கள் அவரைப் பயன்படுத்திக் கொண்டு விடுதலையை நோக்கி முன்னேறினாலன்றித் தங்களுக்கு வெற்றியில்லை. இதைப் பார்க்கும் பொழுது முன்பு ஓரன்பர் தங்களுக்கு அரசியல் அறிவு சுன்னம் என்று கூறியதுதான் நினைவிற்கு வருகிறது. தங்களைப்பற்றி நான் எடைபோடும் அளவிற்கு வந்ததற்காக மிகவும் வருந்துகின்றேன்.

தாங்கள் கொண்டிருக்கும் தமிழ், தமிழர் என்ற உணர்வு, ''வெறி உணர்வு'' கொண்டது என்பதை நான் முடிவு எடுக்க முயன்ற போதெல்லாம் தங்களின் மேலான புலமைதான் அவ்வாறு முடிவு செய்யாமல் இருக்க உதவியது. ஆனால் இன்று அந்த முடிவைத் தகர்க்க உங்கள் புலமைக்குக்கூட வலிவில்லை. தங்களின் தமிழ், தமிழர் என்ற உணர்வு நல்ல முறையில் செயல்பட்டு இருந்த வரைக்கும் தமிழுக்கு ஆக்கம். கட்டு மீறிப் போகும் பொழுது யாருக்கும் இல்லை என்பது தான் முடிபு.

தங்களின் புலமைக்கு வணங்கும் நான் தங்களின் அரசியல் கருத்துக்குத் தங்களைப் போல் முரட்டுத் தன்மையில் விடை கூறாமல் அமைதி வழியில் கூற முற்படுகின்றேன். எப்படி ஒரு கொள்கையைக் கொண்டு ஓரரசைப் பதவியிலிருந்து இறக்க முடியாதோ அவ்வாறே ஒரே ஒரு கொள்கைக்காக ஓரினத்தை நல்ல நிலைக்குக் கொண்டுவர முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (தொடர்ச்சி: 49-ஆம் பக்கம்)

தொடர்: 4

சில கலைச்சொற்கள்

இல. க. இரத்தினவேல்.
(பூதநூல் விளக்குநர், பெரியார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி)

3. 0. Physics—பூதநூல்

'நிலம் தீ நீர்வளி விசும் போடைந்து' 'பூதச் செயல்களின் நுட்பங்கள்' யாவையும் விரிக்கும் நூல், பூதநூல்.

த. மூ: புல்—புள்—புழு—புது—புகுதல் (தோன்றுதல்)
புது—பூ=பூத்தல், தோன்றுதல்
பூ—பூது—பூதம்—தோன்றியது.
Physics—Gk. Physis(=nature)
Gk. Physicos (=natural)

3. 1. Geo—கூ

கூ—ge, geo
கூவளையம்—குவலயம்=உலகம் (உல்+அகம்)
—குளியம்—குழியம் (=உருண்டை)>
L. Globus, E. Globe.

3. 2. Warm—உரும்

த. மூ: உள்—உண்—உண்ணம்
உண் =உண, உணத்தல் = காய்தல், உலர்த்தல்
(எ—டு) உணங்குணுக் கவரும் (ப. பாலை 22)
உண்—உண்ணம் தூய தமிழ்ச்சொல்
உள்—உர்—உரு—உரும்=வெப்பம்
உரும்—Warm, Gk. Thermus

ஏறத்தாழப் பன்னிரு மேலையாரிய மொழிகளில் தமிழ் 'உரும்' திரிந்து வெப்பத்தை உணர்த்துகிறது.

3. 3. Neros—நீரம்

த. மூ: நீர்—நீரம்—ஈரம்
நீர்—ஈர்—ஈர்மை=தண்மை
நீரம்—Gk. Neros
Neros × aneros
Gk. aneros—நீரமற்ற

அல் நீரப் பாரமானி (அனீரப்பாரமானி - Aneroid barometer) யான 'நீரமற்ற பாரமானி'யை 'அனிராய்டு பாராமீட்டர்' எனல் அடிமையுள்ளும் இழிதகைமை யன்றோ?

நீர்—Neros

மேலையாரியத் தமிழ்ச்சொற்கள் சகரப் பின்னொட்டுப் பெறுதல் இயல்பே. தொண்டியைத் TUNDIs என்றும், முசிறியை MUZIRIs என்றும் கூறுதல் அவர் வழக்கு. (சான்று: Periplus of the Erythrean Sea)

3. 4. Air, aero—ஏர்

உயர்த்தல் நிலமட்டத்திலிருந்து உயர்த்தலையன்றிப் பிறிதன்று. உயர்த்தல், உயர்வு என்ற பொருளில் தமிழில் ஆளப்பட்ட 'ஏர்,' நிலத்திலிருந்து உயரே யுள்ள வெளி வளிக்கும் ஆகியது.

த. மு: ஏர்—Gk. aeiro (to raise up)
—Gk. aer (air)

ஆங்கிலத்தில் aero, air என்ற முன்னொட்டுகள் அனைத்தும் தமிழ் 'ஏர்' - இன் திரிபே. இவ்வகையில், aeroplane—ஐ ஏரூர்தி எனவும் aircooling—ஐ ஏர்க்குளிர்ப்பு (குளிர்—> E. Cool) எனவும் கூறலாம்.

உயர்த்தல் என்ற பொருளில்தான், அரத்தப் பெரும்பாய் குழல் Aorta எனப்பட்டதும். காற்றைக்குறிக்கும் வண்டு (—>Wind)க்கு 3. 28. ஐக் காண்க.

3. 5. காயம்—Sky

த. மூ: காள்—காய்—காயம்—காசம் = வானம்
நிறப் பெயரா லாகிய காயம் ஆங்கிலத்தில் Sky எனவாயிற்று.
ஒ. நோ. கால்—Gk. Skelos

3. 6. Metre—மாத்திரை ; Meter—மானி

" நுண்ணிய அளவீட்டு அறிவியல், பூதநூல்"
மா = அள; மா + அனம் = மானம் = அளவு, படி
அளவீடு, அளவு, அளவை, மதிப்பு

மாத்தல் = அளத்தல்
மா — மாத்திரம் = அளவு
— மாத்திரை = அளவிட்ட மருந்து
கண்ணிமைக் கால அளவு.

மாத்திரை—Gk. Metron, L. Meter, E. metre (=measure)

மீட்டர் (Metre) தமிழ் மாத்திரையின் திரிபே ; அளக்குங்கருவி (Meter) மானி.

Ammeter—ஆம்பியர் மானி
Voltmeter—ஒல்ட்டு மானி
Galvanometer—கால்வனிமானி

என்றே பிறவற்றையும் காண்க.

மா, அளத்தற் பொருளையே சிறக்கக் குறிக்கும்.

மா = 1. ஒரு நிறை
2. ஒரு கீழ்வாயிலக்கம் ($\frac{1}{20}$)
3. ஒரு நில அளவு ($\frac{1}{20}$வேலி)

மாத்திரைக்கோல் = அளக்குங்கோல்.

கை (>Gk. Kheir) வரிகளை அளந்து குறியுரைக்கப் பயன்படும் கோல் **மாத்திரைக் கோல்** என வழங்கு மாற்றையும் தேர்க.

செங்கைமாத் திரைக்கோற் செங்கோல் நடாத்தி
(குற். குறவஞ்சி 49 : 32)

3. 7. Foot—(பாதம்)—அடி.

இ. வே : Gk. Podos.
த. மூ: பதி—பதம்—பாதம்.
பாதம்> Sans. Pad, Gk. Podos, E. Foot

கால் அடியின் அளவினின்றும் வந்த foot—ஐப் பாதம் எனவும் கூறலாம். நூற்றுக்காலி (Centipede) முதலியனவும் இவ்வழியினவே. காண்க: Isopod.

3. 8. Dense—திண்; density-திண்மை.

இ. வே; L. densus,
திண் —> L. densus, E. dense.
திண்மை—density

Density என்பதற்கான பொருள் நிறைந்த சொல் 'திண்மை'யே. Solid என்பதைத் திடப்பொருள் எனலாம்.

3. 9. Viscosity—பிசிறி

பிசின்—பிசிறு > E. Viscid (sticky), F. L. L. Viscidus, L. L. Viscosus, L. Viscum

Viscosity: Internal friction due to molecular cohesion in fluids.

Viscosity—ஐப் பிசிறி எனலாமே!

Viscin—[புல்லுருவி (mistlertoe)ப் பழத்திலுள்ள] பிசின்.

எனவே, நிலைத்திணை 'Viscum', தமிழில் பிசினி ஆகட்டும்.

பிசின்—Viscin ஒ. நோ: பகு—வகு

3. 10. Amber—அம்பர்

த. வே: அம் — அம்பு—அம்பர் > E. Amber

அம்பருக்கான கிரேக்கப்பெயர் Elecktron. இதன் உராய்வால் உண்டான ஈர்ப்பாற்றலை Electricity என்றனர். இதையொட்டியே, Electricity-ஐத் தமிழில் அம்பரியம் என்றதும் என்க. எனினும் மின்சாரம் என்பது வழக்கில் மட்டுமின்றி, தமிழ் இயற்கைக்கும் மிக இயைந்ததாய் இருப்பதால் இங்ஙனம் மாற்ற வேண்டியதில்லை.

அரக்கைக் குறிக்க amber எனவருமிடத்து அம்பர் என்றே குறிக்கலாம்.

3. 11. Porus—புரை

த. வே: புல்—புரை = துளை

புரை- E, F. Pore, L. Porus, Gk. Poros

எனவே Porus Pot-புரைப்பாண்டம் ஆக வேண்டும்.

3. 12 Zenith—சென்னி

Zenith—விண்பொருளில் நோக்குநரின் தலைக்குநேர் உயரே உள்ள புள்ளி

சென்னி—உச்சி, உச்சிப்புள்ளி

Zenith—ஐயும் சென்னி எனலாம்.

3. 13. Spot—பொட்டு

A light spot—ஓர் ஒளிப் பொட்டு

A dark spot—ஒரு கரும் பொட்டு

மேலையாரியத்தில் திரியும் போது மெய் முன்வரலும் உண்டு.

ஒ. நோ: காய்—Sky.

சொறி—Psora.

இஞ்சிவேர்—L. Zingiber.

3. 14. Grating—(குரப்பம்)கீற்றணி

இ. வே: L L. grata

த. மூ: குரப்பு—குரப்பம்

கீற்று—கீச்சு;கீச்சுதல் = கோடு கிழித்தல் என்ற வேர்ப் பொருளைக் கொண்ட கீற்றணி (Grating) என்ற சொல்லையும் பயன் படுத்தலாம்.

3. 15. Colour—கெழு, கேழ்

குருவும் கெழுவும் நிறனாகும்மே.

கெழு > Colour

கெழு > L. Color, E. Colour, Color (American usage)

3. 16 Photon—வெட்டம்

வெட்டம் > Gk. Photos. ஒ.நோ: விறை– Gk. Phrisso

Photon என்னும் ஒளித்துகளை 'வெட்டம்' என்க.

3. 17. Shadow—சாடை

சாய்—சாயை—சாடை— > Shadow.

3. 18. Meta—மற்று, மாற்று

மற்று = பிறிதொரு, பின், மறுபடி, மாறாக

Gk. Meta—Prefix for beyond, over, after, among, with besides

Meta எனவரும் முன்னொட்டுக்கு 'மாற்று' என்னும் சொல்லையாள்க.

3. 19. Tele—தொலை, தொலைவு

இ. வே: Gk. telos = distance, Gk. tele—far

Tele என்ற முன்னொட்டுப் பெறும் ஆங்கிலச் சொற்கள் பெரும்பாலும் தொலை என்னும் பொருளிலேயே அமைவது குறிப்பிடத்தக்கதாகும்.

Telemeter—தொலைவுமானி

தொலைக்காட்சிக்கான ஆங்கிலச் சொல் முழுக்கத் தமிழ் வழியது.

Tele (< தொலைவு) + Vision(< விழி)

விழி > L .Vide, E. Vide, Sans. Vid.

தமிழ்ச் சிறப்பு ழகரம் பிறமொழிப் பலுக்கலில் மாறுதல் இயல்பே.

சமற்கிருத வேதமும் (விழி > Sans. Vid = to Know, Veda) வித்தையும் தமிழ் மூலத்தனவே.

3. 20. Oscillate– ஊசல், ஊசலாடு
ஊசல் > L. Oscillo, E. Oscillate

3. 21. Audio—அள், அடுகு
அள்—தெ. அடுகு – > Audio
Audio என்ற முன்னொட்டுக்கு 'அள்' என்ற சொல்லை யாளலாம்.

3. 22. Chill—சில்
சில்— > Chill
நீர் சில்லென்றிருந்தது (உ.வ.)
குளிர் > Cool

3. 23. Friction—உராய்வு
இ. வே: frico = rub
த. மூ: உரசு, உராய் > L. frico; L. Friction
Coefficient of friction—உராய்வுக்குணகம்
frictional Electricity–உராய்வு மின்சாரம்

3. 24. Leukos, Lux—இலக்கம் (வெண்மை)
இலகு—இலங்கு—இலக்கு—இலக்கம் =
ஒளி, வெண்மை, விளக்கம்
இலக்கு > L. lux, Gk. leukos (= white)
ஒளி, வெண்மை விளக்கம் ஆக இலங்குவது இயல்பே.
Leukocyte = White Cell (Colourless Blood corpuscle)
நிறமற்ற நீரின் நிறம் வெண்மையென்றுற் போல, நிறமற்ற குச்சில்கள் வெள்ளணுக்கள் எனப் பெற்றன.

3. 25. Concave—குவி
இ. வே: L. Con (intensive) + Cavus (hollow)
த மூ: குவி
குழை—குகை—குவை (குவி) > Fr. Cave, L. Cavus
Concave surface—குவிதளம்

3. 26. Valve—வள்வு
இ. வே· L. Valva = folding door
த. மூ: வள்வு, வளவு, வளைவு > Volve – Valve

மடக்குக் கதவை(திட்டி வாயிலை)க் குறித்த Valva என்ற சொல்லிலிருந்தே, ஒருபுறம் போக்கியான Valve தோன்றியது. இதனின்றும் கிளைத்ததே பல்வகையான அடைப்பிதழ்களும் ஒரு திசைப் போக்கிகளும் ஆம். (எ-டு) Thermionic Valve.

Valve என்ற சொற்கு அதன் மூலமான திட்டி வாயிலைக் குறிக்கும் வளவு என்ற சொல்லையாளலாம்.

3. 27 வளைதற் பொருளில் ஆன சொற்கள்

குல்—வளைதற் கருத்துவேர்

குல்– குலவு E. Curve

குல்—குள்—குளம்—குளியம்—குழியம்
(கோளம்)— L. Globus, glomus
E. Globe

குல்—குர்—குரங்கு—குறங்கு—E. Crank

குரங்கு—கறங்கு—OE. hring, E. ring

குருகு – குரகம் = நீர்வாழ் பறவைப்பொது
OF. grue—OS. Krano, E.Crane. Gruiformes. குரு(கு)வடிவம்
Genus : Grus; Family : Grindal

குறு—கிறு—கிறுகிறுத்தல் —E. gyrate

குல்—கொள்—கொட்கு—கொக்கு—
கொக்கி—E. hook.

கொடு—கொடுக்கு—E. Crook

கொள்—கோள்—கோண்—கோணம். Gk. gonia
கொள்—கொண்—கொணை E. Cone

குல்—குள்—குரு—குருள்— Curl
சுள்—சுரு—சுருள்—E. Swirl

சுன்—துள்—திள்—திரு—திருது

திரி—Torch (a torch was made by a twisted roll, tow and the like)

திருகு—Torque, torsion.

திருப்பு—Tropic (= a turn of the sun to the North or South)

திரு—திரும்—திருப்பு—Turn

சுல்—சுர்—சுரு—சரு—சருவு—சருகு—சருக்கம்—L. Circum

சருக்கு—சருக்கரம்—சக்கரம் E. Cycle

புள்—புரு—புரள்—Parl (roll)
வள்—வளை = ply.
வள் + து = வண்டு = Wind.
Globe, globular = Spherical—குழிய(ம்)

Crane—வளைந்த கழுத்தையுடைய பறவை (Gruiforme) பாரம் தூக்கும் Crane—உம் இப்பொருளில் வந்த சொல்லே !

Gyration—a whirling motion

'கிறுகிறுவாணம் சுற்றுதல்' என்ற சொல்லடைவையும் நோக்குக.

Torque என்பதைத் திருக்கம் (the turning moment of a tangential force) என்றும், Torsion என்பதைத் திருக்கை என்றும் கூறலாம்.

Crank—An arm attached to a shaft Carrying at its outer end, a pin parallel to the shaft.

Crank—ஐக் 'குறங்கு' எனக் கூறுக.

கூம்பை (Cone) கொணை அன்றிக் கோணை என்னும் பண்டை வடிவிலும் வழங்கலாம்.

Amphitheatre முதலியவற்றில் Amphi (< அம்பு—வளைவு) வளைவையே குறிக்கும்

உருடை—Rota ; ஒ. நோ: அரத்தம்—Rukta.

3. 28. ஒழிபு

குரு (grave—heaviness), கால் (gale), பளிச்சு (flash) பிறங்கு (bright), தெளி (L. Stella), வீங்கு (wax), இளக்கு (lax) போன்ற பல்வேறு சொற்களும், அல், அன் (an), இல் (in), உம்பர், உப்பர் (Super L. Supra hyper) போன்ற முன்னொட்டுகளும் பிறமொழிகளை யடைந்து அறிவியற் சொற்களாய் மிளிருவதை அறிவினர் அறிக ! ஆய்க.

மொழிநூல் மூதறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர் அவர்களின் 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியற் பேரகரமுதலி' வெளிவரின் எத்துணைத் தமிழ்ச் சொற்கள் செறிந்த அறிவியற் சொற்களாய் இலங்குகின்றன என்பது வெளிப்போதருமன்றோ ! முயல்க! முனைக ! முற்றுவிக்க ! O

கூட்டல்

—உணர்வேந்தி.

மூன்றாம் படி:— இப் படியில், விடைக்குச் சரிபார்ப்பெண் காண்கின்றோம். விடையெண்ணின் குறையெண்ணே அதன் சரிபார்ப்பெண்ணாம். பின் முதலிரண்டு படிகளில் உடன்பட்டு நின்ற இரு தொகுதிச் சரிபார்ப்பெண்களில் ஏதேனும் ஒரு தொகுதி யெண்களின் கூடுதற்குக் குறையெண் காண்க. இதனையும் விடைக்கான குறையெண்ணையும் ஒத்துப் பார்க்க இரண்டும் உடன்பட்டு நிற்பின், விடை சரி; அல்லாக்கால் தவறாம். மேற் காட்டின் விடை 51,906. இதன் குறையெண் 3. முதலிரண்டு படிகளில் உடன்பட்டு நின்ற எண்கள் 2, 8, 0, 2 என்பன. இவற்றின் கூடுதல் 12. இதன் குறையெண் 3. இதுவும் விடையின் குறையெண்ணும் உடன்படுவதைக் காண்க. ஆகவே 51,906 சரியான விடையென அறிக.

இவ் வழி முறைகளே எல்லாக் கணக்குகளிலும் கையாளப்பெறுமெனினும், செயன் முறையின்போது மேல் எடுத்துக்காட்டிற் காட்டியவாறு, எல்லாப் படிகளையும் விளக்கங்களையும் எழுதிக் கொண்டிரோம். குறிப்பாகச் செயலட்டவணைக்குச் சரிபார்ப்பெண்கள் கணக்கிடுங்கால், இரட்டிக்கும் குறியெண்களை மீண்டும் எழுதிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. குறியெண்களை மனத்திற்குள்ளாகவே இரட்டித்துக் கொண்டு, மேலுள்ள சுருக்கக் கூட்டெண்ணோடு கூட்டிக் கொள்ளலாம். இவ்வாறு மனத்திற்குள்ளாகவே செய்தல் அத்துணைக் கடியதின்று; எளியதே. ஆக, மேலுள்ள எடுத்துக்காட்டு முழுமையடைந்த நிலையில் பின் வருமாறு தோன்றும்:

7	6	9	8
6′	7′	3′	7′
1	0	0	4
9′	4	7	8′
8	8′	7′	5
			3′
	2	0	3
		9′	4

	1	5	6	7′	
	9′	8′	4′	6′	
	6′	4′	0	1	
சுருக்கக் கூடுதல்:	3	0	1	1	
குறிக் கூடுதல்:	4	4	4	5	
விடை : 5	·1	9	·0	6	கூடுதல்

சரிபார்ப்பு :

வரிசைகள்:	2	8	0	2	(வரிசைகளின் ஒன்பதின் மீதிகள்.)
செயலட்டவணை:	2	8	0	2 = 3	
விடை: 5	1	9	0	6 = 3	

செயன் முறையில் இவ் விளக்கங்கள் கூட இரா ; வெறும் எண்கள் மட்டுமே இடம்பெறும். எந்தெந்த எண் எதெதற்குரித்தாய் எதையெதைக் குறிக்குமென்பது மிக எளிதிற் பழக்கத்திற் புலப்பட்டு விடும். தவருகப் புரிந்து கொள்ளக் கூடாதே என்பதற்காகத்தான் ஒவ்வொரு முறையும் இங்கு எழுதிக் காட்டிக் கொண்டும், பெயரிட் டழைத்துக் கொண்டும் இருக்கின்ருேம் என்பதறிக.

இன்னெரு, சிறிய, எளிய எடுத்துக்காட்டைக் கீழே தருகின்ருேம்:

	2.	1	3
	3.	9	8′
	2.	4′	7
	2.	3	6′
	4′.	6′	7
	2.	1	3′
	6.	3	9
	9′.	6′	3′
சுருக்கக் கூடுதல்:	8.	0	2
குறிக் கூடுதல்:	2.	3	4

கூடுதல்:	3	3 .	7	6	விடை = 33.76
இரட்டிக்கும் குறிக்கூடுதல்:		2.	3	4	
சரிபார்ப்பெண்கள்:		3.	6	1	
வரிசைகளின் ஒன்பதின் மீதிகள்:		3.	6	1	

இங்குச் செயலட்டவணை முழுவதையுமே எழுதிக் கொண்டிராமல், இரட்டிக்கும் குறியெண்களை மட்டுமே எழுதிக் கொண்டோம் என்பதைக் கவனிக்க. பின்னர் பார்வையை விடையின் மீது செலுத்தாமல், மேல் விரித்தவாறு விரிவாக்கப்பட்ட செயலட்டவணை எண்களில், இனமானவற்றைக் கூட்டிச் சரிபார்ப்பெண்களைக் கணக்கிட்டிருக்கின்றோம் என்பதையுங் கவனிக்க.

மேலும், மேற் கணக்கின் விடையான 33.76 – இன் குறையெண் 1, 3, 6, 1 ஆகியவற்றின் குறையெண்ணும் 1–ஏ; ஆகவே, விடை சரியென் றறிக.

திராக்டென்பெர்க்கு முறையை முழுமையாய் அறிந்துகொண்ட இந்த நிலையில் சுட்ட வேண்டிய தேவையே யில்லாவாறு – இதன் சிறப்பியல்புகளும், நன்மைகளும், பழைய முறையின்பாலுள்ள குறைபாடுகளும் எளிதில் புலப்படும். இருப்பினும், இந்தத் தொடரின் முழுமையைக் கருதி அவற்றை ஈண்டு எடுத்துச் சுட்டுவோம்.

கூட்டலைப் பொறுத்தவரை கருத்திற் கொள்ள வேண்டிய கூறுகள் இரண்டு. அவை துல்லியமும் விரைவும் ஆம். திராக்டென்பெர்க்கு முறை பழைய முறையினுந் துல்லியமானது; விரைவானது. மேலும் பழைய முறைப்படி மிக நீண்ட எண் வரிசைகளைக் கூட்டுங்கால், நிரலளவினனுக்குத் தவறே ஏற்படாது எனத் திண்ணமாகச் சொல்ல முடியாது. ஏழுருக்கள் கொண்ட எண் வரிசைகளை அவன் கூட்ட வேண்டுமென வைத்துக் கொள்வோம். இங்கு மேற்கீழாக ஏழு வரிசைகளைத் தனித்தனியே கூட்டியாக வேண்டும். இவ்வேழு தடவைகளில் ஏதேனும் ஒன்றிலேனுந் தவறேற்பட்டுவிட நிறைய வாய்ப்பிருக்கின்றது. அப்படித் தவறேற்பட்டு விட்டால், தவறேற்பட்டுவிட்ட வரிசை அல்லது இடத்தை

அத்துணை எளிதில் உடனடியாகக் கண்டுகொள்ள முடியாது. மேலும், விடையைச் சரிபார்க்க எனத் தனிவழி இல்லை. அஃதாவது விடையைச் சரிபார்க்க வேண்டுமெனில், கணக்கை முதலிலிருந்து செய்வதைத் தவிர வேறுவழி இல்லை. இவை பழைய முறையின் குறைபாடுகள்.

திராக்டென்பெர்க்கு முறை இப்படியன்று. இதில் விடையைச் சரிபார்க்க வேண்டுமெனில், கணக்கை மீண்டுஞ் செய்ய வேண்டிய தேவையே இல்லை; அதற்கெனத் தனிவழி யுண்டு. மேலும், இரட்டைச் சரிபார்ப்புக்கும் வழியிருக்கின்றது. இவற்றோடு, ஒவ்வொரு வரிசையையுந் தனித்தனியே சரிபார்த்துக் கொள்ளவும் முடியும்.

திராக்டென்பெர்க்குவின் சரிபார்ப்பு முறையால் நமக்குக் கிட்டும் நன்மைகள் மூன்று. அவை:

1. திரும்பக் கூட்டும் உழைப்பு மிச்சம், அதே நேரத்தில்,

2. தவறிருப்பின், மிக வெளிதிற் களையக் கூடிய வண்ணம், எந்த வரிசையில் தவறென்பதனை உடனடியாகவுங் குறிப்பாகவுங் கண்டு கொள்கின்றோம்.

3. மீண்டுங் கூட்டிப் பார்த்தாற் கூடத் தவறு தென்பட்டு விடும் என்பது உறுதியில்லை. ஆனால், இம் முறையிலோ இது திண்ணம்.

இவ் விறுதி யுண்மை பலருக்குப் பிடிபடுவதில்லை. ஆதலின் இதைச் சற்று விரிப்போம். ஒவ்வொருவருக்கும் அவரவர்க்கே உரித்தான குறைபாடுகளும் பிழைவகைகளும் இருக்கின்றன. இதனைச் சொற்பலுக்கத்திற்றான் மிகத் தெளிவாகக் கண்டு கொள்ள முடியும். பிறவற்றை யெல்லாந் தவறின்றிப் பலுக்க மாட்டும் ஒருவன், 'வெள்ள'த்தை 'வெல்ல'மெனப் பலுக்குவதும் உண்டு. இப்படியே 'கனம்' என்பதைக் 'கன்னம்' என்பாரும் உளர். நம்மிற் பலர் கவனிப்ப தில்லை யெனினும் எண்கணிதத்திலும் இதே வகைப் பிழை ஏற் படுகின்றது. 5×9, 35 என்னுங் கோணல் மனப்பாங்கு சிலர்பால் இருக்கலாம். 5×9 என்னென எடுத்த எடுப்பிற் கேட்பின், 45 எனச் சரியாகச் சொல்ல வல்லவர், நெடுங்கணக்குகளிடையே 35 எனத்

தவற நேரலாம். இப்படியே ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு வகையான குறும்புப் போக்கு இருக்கின்றது. கணக்கைத் திரும்பச் செய்து சரிபார்க்கும் முறை அத்துணைச் சிறப்புடையதன்று என்பதற்கான காரணியங்களில் இதுவுமொன்று. என்னையோவெனின், முதற் கூட்டலின்போது இழைக்கப்பட்ட தவறே மறு கூட்டலிலும் நேர மிகுந்த வாய்ப்பிருக்கின்றது என்றறிக.

இதுதான் போகட்டும். இன்னொருவரைக் கூட்டச் செய்து சரிபார்க்கலாமே என்னலாம். இதுவுஞ் சிறந்ததாவதில்லை. ஏனெனில், எல்லா நேரங்களிலும் இன்னொருவர் கிடைப்பார் என்பது என்ன உறுதி? அப்படியே கிடைப்பினும், அவரிடத்தும் அவர்க்கே யுரிய குறைபாடு இயற்கையாக அமைந்திருக்கக் கூடுமே. ஒரே நிலையில் இதுவும் அவரைவிட்டு நீங்கிவிடாதே. சற்று விரைவாக எழுதுகையில், 7 என்பதை நிறுத்தி, அழகாகத், தெளிவாக ஒருவர் எழுதவில்லையென வைத்துக் கொள்வோம். இது மற்றவர்க்கு 1 போலத் தோற்ற மளிக்கலாம். இந்த நிலையில் பின்னவர் கூட்டிப் பார்த்தால், அவர்க்குச் சரியான விடை எப்படி வரும்? இவ்வாறே, இயற்கையாகவே ஏற்படக் கூடிய தவறுகள் பல இருக்கின்றன. ஆதலாற்றான், மீண்டுங் கூட்டிச் சரிபார்த்தலினும் பிறிதொரு முறையால் சரிபார்த்தலே சிறந்ததென்கின்றோம். இதன் பொருட்டே திராக்டென்பெர்க்கு இதற்கெனத் தனிவழியை உருவாக்கினார் என்பதோர்க. இத்தனைச் சிறப்பியல்புகளும் நன்மைகளுங் கொண்ட திராக்டென்பெர்க்கு முறை கணிதத்தின்பால் உண்டாகும் வெறுப்பை அகற்றிச் சுவையூட்டவும் வல்லதா யிருக்கின்றதென்பது எத்துணை உண்மையென உணர்ந்து கொள்க.

இதுவரை திராக்டென்பெர்க்குவின் கூட்டன் முறையை விரித்தோம். இப்போது, அதனைப் பெரும்பான்மை ஒத்த பிறிதொரு கூட்டன் முறையினை அறிமுகப்படுத்துவோம். இதற்கும் திராக்டென்பெர்க்கு முறைக்கும் உள்ள வேறுபாடுகள் மூன்றே. அவை: (1) திராக்டென்பெர்க்கு முறையிற் கூட்டெண் 11—ஐ ஒருபோதுந் தாண்டியதில்லை. இதில் அது 10—ஐத் தாண்டாது. (2) செயலட்டவணையிலிருந்து விடையைப் பெறுமிடத்துத் திராக்டென்பெர்க்கு முறையில் 'L' வடிவக் கூட்டன் முறையைக் கையாண்டோம்; இதில் '/' வடிவக் கூட்டன் முறையைக் கையாள்கின்றோம்.

(3) செயலட்டவணையைச் சரிபார்க்கு மிடத்தில், திரொக்டென்பெர்க்கு முறையில் குறியெண்களை இரட்டிக்க வேண்டும்; இதில் அப்படிச் செய்ய வேண்டியதில்லை, இம் மூவிடங்களில் தவிரப் பிறவிடங்களில் இவ் விரு முறைகள் வேறுபடுவதில்லை.

புதுமுறைக் கூட்டலைப் பின்வருமாறு செய்க. முதலில் எண்களை வரிசை வரிசையாக எழுதிக் கொள்க. பின்னர் கூட்டலை எந்த வரிசையில் வேண்டுமானாலுந் தொடங்குக மேலிருந்து கீழாகக் கூட்டுக. 10-க்குமேல் ஒருபோதும் கூட்ட வேண்டா என்ற நெறியைப் பயன்படுத்துக. எந்த எண்ணைக் கூட்டினுற் கூட்டெண் 10 அல்லது 10-க்கும் மிகுதியாகின்றதோ, அந்த எண்ணுக் கருகில் '/' என்ற குறியிட்டுக் கொள்க. கூட்டெண்ணிலிருந்து 10-ஐக் கழிக்க. வரும் மீதியுடன் கூட்டலைத் தொடர்க. அந்த வரிசையின் இறுதிக் கூட்டெண் எதுவோ அதுவே அந்த வரிசையின் சுருக்கக் கூட்டெண். இதனை அந்த வரிசைக்கு நேராக எழுதிக் கொள்க. பின்னர் இட்டுவந்த குறிகளை எண்ணுக. இஃது அந்த வரிசையின் குறியெண். இதனை அந்த வரிசையிலேயே சுருக்கக் கூட்டெண்ணிற்குக் கீழ் எழுதுக. இவ்வாறே ஒவ்வொரு வரிசைக்கும் சுருக்கக் கூட்டெண்ணும், குறியெண்ணுங் கண்டு அவற்றை நிரல்பட எழுதிக் கொள்க.

செயலட்டவணையிலிருந்து விடையினைப் பெறத் திராக்டென்பெர்க்கு முறையில் 'L' வடிவக் கூட்டலைப் பயன்படுத்தியது நினைவிருக்கும். இங்கு இதற்கு '/' வடிவக் கூட்டலைக் கைக்கொள்க. ஏதேனும் ஒரு வரிசையின் சுருக்கக் கூட்டெண்ணுடன்; அவ் வரிசையின் வலக்கைப் புறத்து வரிசையின் குறியெண்ணைக் கூட்டினுல், முதலி லெடுத்துக்கொண்ட வரிசைக்குரிய விடையெண்(ணுரு) கிடைக்கும். அஃதாவது, பத்திட வரிசையின் சுருக்கக் கூட்டெண்ணையும், அதற்கு வலக்கைப் புறத்தான ஒன்றிட வரிசையின் குறியெண்ணையுங் கூட்ட, விடையின் பத்திட எண் கிடைக்கும். இவ்வாறே, நூற்றிட வரிசையின் சுருக்கக் கூட்டெண்ணும் பத்திட வரிசையின் குறியெண்ணும் விடையின் நூற்றிட எண்ணைக் கொடுக்கும். இவ்வாறே பிறவற்றிற்கும் என்றறிக. இந்த முறைப்படி முதலெடுத்துக் காட்டு பின்வருமாறு தோன்றும்.

		7	6	9	8
		6'	7'	3'	7'
		1	0	0	4
		9'	4	7	8'
		8'	8'	7'	5'
					3
			2	0	3
				9'	4'
		1	5'	6'	7
		9'	8'	4	6'
		6	4	0	1
சுருக்கக் கூடுதல் :		7	4	5	6
குறிக் கூடுதல் ;		4	4	4	5
விடை .	5	.1	9	.0	6

சரிபார்த்தல்

செயலட்டவணைக் குரிய சரிபார்ப்பெண் காண திராக்டென்பெர்க்கு முறையில், குறியெண்ணை இரட்டித்து, இரட்டித்த எண்ணோடு, அதற்கினமான சுருக்கக் கூட்டெண்ணைக் கூட்டிக் குறையெண் கண்டோம். புதுமுறையில் குறியெண்ணை இரட்டிப்பதில்லை. உள்ள குறியெண்ணோடு, அதற்கினமான சுருக்கக் கூட்டெண்ணைக் கூட்டிக் குறையெண்ணைக் கணக்கிடுகின்றோம். இதுவே செயலட்டவணையில் அந்த வரிசைக்கான சரிபார்ப்பெண். இந்த மாற்றங்களைத் தவிர வேறு வகையில் இது திராக்டென்பெர்க்கு முறையிலிருந்து மாறுவதில்லை.

முதலெடுத்துக் காட்டைச் சரிபார்க்க:

7	6	9	8
6'	7'	3'	7'
1	0	0	4
9'	4	7	8'
8'	8'	7'	5'
			3
	2	0	3

				9'	4'	
		1	5'	6'	7	
		9'	8'	4	6'	
		6	4	0	1	
சுருக்கக் கூடுதல் :		7	4	5	6	
குறிக் கூடுதல் ;		4	4	4	5	
கூடுதல் :	5	.1	9	.0	6	விடை : 51, 906

சரிபார்ப்பு:—

செயலட்டவணைச் சரிபார்ப்பெண்கள்		11	8	9	11	
		V	V	V	V	
		2	8	0	2	= 3.
வரிசைகளின் சரிபார்ப்பெண்கள்:		2	8	0	2	
விடை :	5	1	9	0	6	= 3.

குறையெண்கள் ஒன்றுபடுகின்றன. ஆதலின் விடை சரியானதே என்றறிக.

சுருக்கக் கூட்டெண் காண, வரிசைகளை மேல்கீழாகக் கூட்டுங்கால், கூட்டெண்ணை 11 (அல்லது 10)க்கு மேலாக்கும் எண்ணுக்கருகில் '/' குறியிட்டுக் கொள்கின்றோம் அன்றோ, இப்படி ஒரே வகைக் குறிக்குப் பகரமாக, இருவகைக் குறியைக் கையாளலாம். எந்த எண் கூட்டெண்ணை 11 (அல்லது 10) ஆக்குகின்றதோ, அந்த எண்ணுக்கருகில் '√' என்ற குறியையும், எந்த எண் 11 (அல்லது 10)க்கு மேலாக்குகின்றதோ அதற்கருகில் '/' குறியையும் இட்டுக் கொள்ளலாம். இவ்வாறு, குறிகளில் இருவகை ஏற்றுக்கொளின், கூறுவோம். கூட்டலின்போது 11 (அல்லது 10) ஐக் கழிக்கையில், சில நேரங்களில் தவறாகக் கழித்துவிட நேரிடலாம். இந்த நேரங்களில் குறி மாறுபாடு பெரும்பான்மை கைகொடுத்து, நம் உழைப்பைக் குறைக்கும், இத் தவற்றைக் களைய, '√' குறிக்குக் கீழுள்ள அல்லது மேலுள்ள எண்களை மட்டுங் கூட்டிச் சரியாத்தாலே போதுமென றறிக. குறிமாறுபாடு காலமும் வேலையும் வீணாகாமல் காப்பதறிக. சிறுபான்மை நேரங்களில் குறிமாறுபாடும் பயனற்றுப் போம் என்பதும் அறிக.

இந்தத் தொடர்களில், இருவகைக் கூட்டன் முறையைப் பயின்றோம். இதில் எஃது உங்கட்கு ஏந்தாய் இருக்கின்றதோ அதனைக் கைக்கொண்டு, உங்கள் உழைப்பும் காலமும் வீணாகாமல், பயன் பெறுக. திராக்டென்பெர்க்கின் பெருக்கல் முறையை அடுத்த இதழில் தொடங்குவோம். O

விடிவைத்தேடி....

—இரணியன்

[இப்பாடலின் கண் பேசுகின்றவன் குழுகாயத்தினின்றும் "சேய்மைப் படுத்தப் பெற்ற" ஒரு தனிமாந்தனல்லன்! ஒரு குழுகாய மாந்தன்; ஒரு குழுகாய உயிரி! (சமுதாயப் பிராணி!) இந்த நாட்டின் ஓர் உண்மையான குடிமகனின் இடர்களும் ஏக்கங்களும், தொல்லைகளும் துயரங்களும் இப்பாட்டின் ஒவ்வொரு சொல்லாயும், சொற்படு பொருளாயும் படர்ந்து கிடக்கின்றன. அவனது வாழ்வும் போக்குமே "விடிவைத் தேடி."]

இருள்நீங்கிட வில்லை! – விளக் (கு)
ஒளியென் பது மில்லை!
மருள்மாய்ந்திட வில்லை! – துயர்
மறைந்தோடவு மில்லை!

எங்கும் பெருந் தொல்லை! – இஃ(து)
ஒழியும் வழி இல்லை!
பொங்கும் இடர் போக்கும் - வகை
புரிகின்றது மில்லை!

விண்ணில் இடி மின்னல்! – என்
வழியில் நிறை முட்கள்!
துன்னும் இடர்க் காட்டில் - நான்
துவண்டேநடக் கின்றேன்!

நிலவும் எழும் என்றார்! – இருள்
நீங்கும் எனச் சொன்னார்!
குலவும் கார் தவிர – நான்
கொடுவான் எது கண்டேன்?

கால்கள் நடை தளர்ந்த! – என்
கண்கள் ஒளி இழந்த!
பாழும் மன வேட்பால் – நான்
பசியாய்நடக் கின்றேன்!

தமிழ்மொழி, வரலாற்றுப் புரட்சி நூல் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி வெளியீட்டுத் திட்டத்தில் நீங்கள் பெருமைமிகும் ஓர் உறுப்பினரா? இல்லெனில், இன்றே உறுப்பினராகுங்கள்!
விளக்கங்கட்குத் தென்மொழிக்கு எழுதுங்கள்

தொல் பொருள்-காலக் கணக்கீடு.

அ. இராசேந்திரன்
கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம்.

அகழ்வாய்வுத் துறையில், தொல்பொருள்கள், புதைந்து கிடக்கும் இடங்களைக் கண்டறியவும், அவற்றின் காலத்தைத் துல்லியமாகக் கணக்கிடவும் சில புதிய முறைகளைக் கையாளுகின்றனர். இக் கட்டுரைவழி தொல்பொருள் காலக் கணக்கீட்டு முறையைச் சுருங்கக் காண்போம்.

மண் அடுக்கு முறை:- இம்முறை இயற்கையானது ; மிகப் பழமையானது. பழைய மட்பாண்டங்கள், ஓடுகள், புதைந்திருக்கும் ஆழத்தைக் கொண்டு காலத்தைக் கூறுதல். இயற்கைச் சட்டிற்கு (Natural Red Gravel) மேல் உள்ள மண் பல அடுக்குகளைக் கொண்டது. உயர்ந்த அளவாகப் பதின்மூன்று மண் அடுக்குகளாகப் பகுப்பர். முதல் இரண்டு மண் அடுக்குகளில் கிடைக்கும் பொருளை கி. பி 9 முதல் 15 நூற்றுண்டுகளுக்கு உட்பட்ட பொருள் என்றும், மூன்று முதல் ஏழு மண் அடுக்குகளில் கிடைக்கும் பொருளின் காலத்தை கி. பி. மூன்று முதல் பத்து நூற்றுண்டுகளுக்கு உட்பட்டது என்றும் கூறுவர். எட்டு முதல் பதின்மூன்று மண் அடுக்குகளில் கிடைக்கும் பொருளின் காலம் கி. மு. மூன்று முதல் கி. பி. மூன்றும் நூற்றுண்டு வரை கணக்கிடப்படுகிறது. இம்மண் அடுக்குகள் இடத்திற்கு இடம் வேறுபடலாம். இம்முறையில் அறிக்கமேடு, உறையூர் பகுதிகளில் எடுக்கப்பட்ட பொருள்களின் காலத்தை கி. மு. முதல் நூற்றுண்டு என்றும், திருக்காம்புலியூரில் எடுக்கப்பட்ட பொருள்களின் காலத்தை கி. மு. 300 என்றும் கணிப்பர். இவ்வகைக் கணிப்புகள் துல்லியதென்று கூறமுடியாது.

கரி-14. முறை: (Carbon-14 Method of Dating)

உயிருள்ள பொருள்கள் அனைத்திலும் கரிமங்களுள் ஒருவகை எனக் கூறப்படும் கரி-14 ஒரு முகாமையான பகுதிப் பொருள். எப்படி ? எங்கோ இனந்தெரியாத அண்ட வெளியிலிருந்து நிலவுலகை நோக்கிப் பாயும் ஒருவகைக் கதிர்வீச்சு (Cosmic Rays), இவ்வுலகின் மேற்பரப்பைத் தாக்கும். அப்படித் தாக்கப் பெறும் காற்றுப் பொருள்களின் அணுவின் உட்கருவைப் பிளந்து கனமிக்க நடுமிகளை (Neutron) அவை வெளியேறச் செய்கின்றன. விடுபட்ட நடுமிகள் விரைவாகக் காற்றை ஊடுருவிக்கொண்டு, காற்றில் உள்ள

காலகத்தைக் (Nitrogen) கரி-14 ஆக மாற்றுகின்றன. இக்கரி-14 காற்று வெளியில் உள்ள தீயதையுடன் (Oxygen) கூடி கரியிருதீயதையாக (Co_2) மாறும். இக்கரியிருதீயதையை நிலத்திணைகள் (தாவரங்கள்) உட்கொண்டு நீரகக் கரிப்பொருள்களாகச் (Starch) சேமித்து வைக்கின்றன. இந்நிலத்திணைகள் பிற உயிர்களுக்கு உணவாகித் தத்தம் உடலின் பல பாகங்களிலும் பகுதிப் பொருளாகச் சேமித்து வைத்துக்கொள்ளும். உயிர்கள் அழிந்தவுடன் அல்லது இறந்தவுடன் அப்பொருள்களிலிருந்து கரி-14 மட்டும் தனியே பிரிக்கப்பட்டு மெதுவாக ஒரு குறிப்பிட்ட வேகத்தில் வெளியேற்றப்படுகின்றது.

இவ்வாறு கரி-14 ஒரு பொருளிலிருந்து பாதியாகச் சிதைந்து வெளியேற 5568 ஆண்டுகள் ஆகின்றன. முக்கால் பகுதி வெளியேற 11,136 ஆண்டுகளும், அப்பொருளில் உள்ள முழுக் கரி-14உம் வெளியேற 70,000 ஆண்டுகளும் ஆகின்றன என்று கணக்கிட்டுள்ளனர். தொல்பொருள் அகழ்வின்போது கிடைக்கும் மட்கிய தவச(தானிய)வகைகள், மரப்பொருள்கள், எலும்புகள் போன்ற உயிர் நீங்கிய பொருள்களில் உள்ள கரி-14 சிதைந்து வெளியேறும் அளவீட்டை மேற்குறித்த காலக்கணக்கோடு ஒப்பிட்டு, அஃது இறந்து எத்தனை ஆண்டுகள் ஆயின எனக் கணிக்கப்படுகிறது. இந்தியாவில் கரி 14–இன் அளவை அறியும் நிறுவனம் பம்பாய்–டாட்டா ஆய்வுக்கூடம் ஒன்றே! பூம்புகார் புதைபொருள்களின் காலம் இம்முறையில்தான் கணிக்கப்பட்டது. சிந்துவெளி அரப்பா-கி. மு 2500 ஆண்டுகட்கு முற்பட்டதென்றும், உலகில் முதன்முதல் உழவுத் தொழில் செய்யப்பட்ட வடஇராக்-சார்போ நகரின் காலம் கி. மு. 7000 என்றும் கணித்துள்ளனர். இம்முறையை வைத்து கி. மு. 58,000 வரை துணியலாம்.

காந்தத்திறன் முறை (Archaeo-Magnetism):-

ஒவ்வொரு கல், களிமண் பொருள், குன்று இவற்றில் எல்லாம் காந்த ஈர்ப்புத்திறன் கொண்ட இரும்புத்தீயதை (Iron Oxide) உண்டு. இத்திறன் காலத்தால் அறவே அழிந்து விடுவதில்லை. தொல்பொருள் ஆய்வின் பொழுது கிடைக்கும் அடுப்புகள், செங்கல், எரிந்து பாழான பிற பொருள்கள் ஆகியவற்றிலும் ஓரளவு காந்த ஈர்ப்பு ஆற்றல் எஞ்சியிருக்கும். எஞ்சிய இக்காந்த ஆற்றலை

எவ்வளவு எனக் கணக்கிட்டு, அதனை நிலத்தின் காந்த ஈர்ப்புத் திறனோடு ஒப்பிட்டுக் காலத்தை எளிதாகக் கணக்கிடலாம். இம் முறை பிரிட்டனில் முதன் முதல் ஆர். எம். கூக், சே. சி பெல்சி என்பவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் ஆய்வு முறைக்கும், டாட்டா ஆய்வுக்கூடம் வாய்ப்புகள் செய்து வைத்திருக்கிறது. இந்தியாவில் பல பகுதிகளிலிருந்து கிடைத்த மட்பாண்டகள், ஓடுகள் போன்ற பல பொருள்களின் காலத்தைத் துல்லியமாகக் கணக்கிடுகிறார்கள் இம்முறையில் 2000 ஆண்டுகள் வரை கணக்கிட முடியும்.

வெப்ப ஒளிர்வு முறை (Thermo Luminiscence):-

ஒரு பொருளை வெப்பப்படுத்தும் போது ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையில் அப்பொருள்கள் அணுவின் ஒரு கூறான எடையற்ற மெல்லிய எதிர்மின்னிகளைக் கண்ணுக்குத் தெரியாத மிகக் குறைந்த ஒளிர்வோடு வெளியேற்றும். இவ்வொளிர்வைப் பட ஒளிபெருக்கியால் (Photo-Multipliers) கண்ணுக்குப் புலனாகுமாறு பன்மடங்கு பெருக்கிக் காலம் தெரிந்த பிறபொருள்களின் ஒளிர்வோடு ஒப்பிட்டுக் காலம் காணலாம். இம்முறையை முதன் முதல் அறிமுகப் படுத்தியவர்கள் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பண்டாரகர். கென்னடி என்பவரும், நாப்பூப்பு என்பவருமாவர். ஒரு பொருள் 800^0(F) வெப்பத்தில் கண்ணுக்குத் தெரியாத எதிர்மின்னிகளை வெளிவிடுகின்றது என்றனர். ஓமர் (Homer) காலத்திய மட்பாண்டங்களின் காலம் இம்முறையில்தான் கணிக்கப்பட்டது. மட்பாண்டங்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய இந்திய நாகரிகத்தின் காலத்தை அறிய இம்முறை ஏற்றதாகலாம்.

இம்முறையே அன்றி நீறிமம்–இலியன் (Pottasium-Argan) என்ற ஒரு முறையும் உண்டு. இவ்வாய்வின் மூலம் கிழக்கு ஆப்பிரிக்காவில் தாங்கனிகா என்ற இடத்தில் கிடைத்த மண்டையோடு 1,750,000 ஆண்டுகட்கு முற்பட்டது என்று கணித்தார்கள். இவ்வாறு தவச வகைகள், மரப் பொருள்கள் எலும்புகள் போன்ற கரி மிகுந்த பொருள்களுக்குக் கரி-14 முறையும், கல், மண், பாறை போன்ற கரி குறைந்த பொருள்களுக்குக் காந்தத் திறன் முறையும் கரியோ, காந்தத்திறனோ வேண்டிய அளவு இல்லாத மட்பாண்டங்கள் போன்ற பிறபொருள்களுக்கு வெப்ப ஒளிர்வு முறையும் பயன் படுத்தப் பெறுகின்றன.

பயன்பெற்ற நூல்கள்:

1. Dr. M. A. Thangaraj's Modern Physics.
2. T. V. Mahalingam, "Report of the Excavations in the Lower Cauvery Valley 1962-64." University of Madras. 1970.
3. R. M. Cook and Belshe, "Archaeo-magnetism-A Preliminary Report on Britain" Antiquity Vol. XXX11 P. P. 167-78.
4. National Geographic Magazine, "How old is it.' Aug. 1958 P. P.234-55
5. H. D. Sankalia, "Indian Archaeology To-day"., Heras Memorial Lectures, 1960. Asia Publishing House, Bombay, 1962.
6. B. B. Lal, "Indian Archaeology Since Independence" Motilal Banavidass Delhi. 1964.
7. கோடைகாலக் கல்வெட்டுப் பயிற்சிச் சொற்பொழிவுகள்-1971. O

தென்மொழி, கடலூர்-1

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா	14 உருபா
அரையாண்டுக்கட்டணம்:	5 உருபா	6 உருபா.	7-50
தனியிதழ்:	75 காசு	90 காசு	1-10

ஓரிதழுக்கு உரு. 1-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க.

'தென்மொழி'க்கு நன்கொடை.

11-1-71 முதல் 8-4-71 முடிய தென்மொழியின் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத் தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

	உருபா
திரு. இரா. சோதி மதன், வரகூர்-சேலம்	1-00
திரு. அப்பா செம்பரிதி. பெங்களூர்-7	5-00
திரு. உ. ச. எழில், வாள் வாங்கி-முகவை	1-00
பர். திரு. பொ. இளங்கோ, உக்கரம்	25-00
திரு. சா. க. பழனிச்சாமி, தாளவாடி	10-00
திருவாட்டி இரா. தமிழரசி, முதனை	5-00
திரு. து. கலியபெருமாள், காட்டுக் கூடலூர்	1-00
திரு. சி. அறிவுறுவோன், அம்மையகரம்	2-00
மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி.	4-00
திரு. எசு. அபிரகாம் எம். ஏ., எம். எசு. எல், டி. மதுரை-13	4-00
பர். திரு. பொ. இளங்கோ, உக்கரம்	15-00
திரு, சா. க. பழனிச்சாமி, தாளவாடி	10-00
திரு. மெ. சு. இளங்கோ வழி சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்கள்	17-00
திரு செ. செயராமன், பட்டணம்	10-00
திரு. கல்லை. பெருஞ்சித்திரன், கெ. கல்லுப்பட்டி	10-00
திருவாளன்மார் பெ. புதுமைப்பிரியன், பெ. செல்லையா, பெ. அரசு, சின்னத்தம்பி மலையம், 5-ஆம் முறையாக	100-00
திரு. பொற் செழியன், பெங்களூர்	3—50
கோவை அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி எட்டாம் வகுப்பு மாணவர்கள்	2-90
திரு. உலை. சு. முத்தையா, மதுரை-12	2-00
திரு. கே. காளிமுத்து, மலையம்	6-50
மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி	4-00
திரு. மு. அப்துல் வகாபு, காந்தாவனம்	1-00
திரு. ஏ. எசு. கே. மூர்த்தி, பெரோசுப்பூர்	1-00
மறைமலையடிகள் தமிழ் நெறிமன்றம், அவிநாசி	16-00
திருவாளன்மார் பெ. புதுமைப் பிரியன், பெ. செல்லையா, பெ. அரசு, சின்னதம்பி 6, 7-ஆம் முறையாக	200-00
இயற்றமிழ்ப் பயிற்றகம் திருவாரூர்	10-00
திரு. அரங்க-திருமாறன். உரத்தநாடு-புதூர்	10-00

[தொட

தென்மொழிக் கொள்கை 2-ஆவது மாநாடு

தென்மொழிக் கொள்கை 2-ஆவது மாநாடு வரும் மேழத்திங்கள் 23, 24,-மே 73 முதல் காரி ஞாயிறு (5—5—73, 6—5—73) மதுரையில் நடைபெறுவதாக முடிவெடுக்கப் பெற்றுள்ளது

மாநாட்டு அமைப்பாளர் திரு. பெருஞ்சித்திரனார் முன்னிலையிலும் திரு. இறைக்குருவனார் தலைமையிலும் மாநாட்டின் அமைப்புக் கூட்டம் சிலை 10, (24—12—72) அன்று மதுரையில் இரவு 2 மணி யளவில் நடந்து, மாநாட்டுச் செயற்குழு அமைக்கப்பெற்றது.

அக்கால், வரவேற்புக்குழுத்தலைவர். க. வெ. நெடுஞ்சேரலாதன் 'தீப்பொறி' ஆசிரியர். செயலர்: உ. அரசுமணி. துணைச்செயலர்: சும. முருகுவேந்தன். பொருளர்: கா. தென்னவன். செயற்குழு உறுப்பினர்கள்: பெ. திருவேங்கடம். கி. மாவேந்தன், அ. தமிழன்பன், ஓடை-தமிழ்ச்செல்வன், ப. முருகவேள். ஆகியோர் செயற்குழுவில் இடம் பெற்றனர். செயற்குழு கீழ்க்காணுமாறு செயல்களை வகுத்துக்கொண்டது.

5—5—73 அன்று காலை 8 மணியினின்று பகல் 1 மணி வரை யானையின்மேல் தமிழக விடுதலைக் கொடியேந்தி மறவர் ஒருவர் முன்னே செல்ல, அவர் பின்னே ஆயிரக் கணக்கான தமிழ் மறவர்கள் ஊர்வலமாக அணிவகுத்து, மதுரை நகர் முழுதும் ஊர்வலம் வருவர்.

பிற்பகல் 3 மணி முதல் இரவு 10 மணிவரை மாணவர் விடுதலை மாநாடு நடைபெறும்.

அன்று இரவு நாடகம் நடைபெறும்.

மறுநாள் 6—5—73 அன்று காலை 9 மணியினின்று 2 மணி வரை குமுகாய மாநாடும், மாலை 4 மணியிலிருந்து 10 வரை அரசியல் மாநாடும் நடைபெறும். இரு மாநாடுகளிலும் தமிழக முன்னணிக் கட்சித் தலைவர்களும், ஆளுங்கட்சி அமைச்சர்களும் கலந்து கொள்வர்.

மாநாட்டிற்குக் கீழ்க்காணுமாறு பொருள் வரவுத் திட்டம் வகுக்கப்பெற்றது.

மாவட்டங்களின் வரவுக்குறியீட்டுத் தொகை வருமாறு: (உருபா அளவில்)

சென்னை 200 சேலம் 200 மலேயா அன்பர்கள் 500 கோவை 200 தஞ்சை 200 தென்னார்க்காடு 200 திருச்சி 200 புதுவை 100 காரைக்கால் 100 முகவை 200 நெல்லை 200 நீலமலை 100 மதுரை 500.

O

இந்தி எதிர்ப்பு மறவர்

ஈழத்தடிகட்கு நன்கொடை

[பட்டியல் : 5] தொகை

71.	திரு. இரணியன்	5—00
73.	,, கோட்டை இராவணன்	5—00
74.	,, கி. செம்பியன்	5—00
75.	,, கி. மூப்பால் மணி,க.மு [தமிழத்துணைப் பேராசிரியர்]	3—00
76.	,, மு. கருப்பையன்	2—00
77.	திருவாளன்மார் பொ. கந்தசாமி க.இ, ஆ. ப. பெ. விசுவநாதன், மு. துரைசாமி கு. முத்துசாமி, ஆர். இராதாகிருட்டிணன், சு. அன்பழகன், அ. இளம்பரிதி, சு. செல்வராசு, த. ப. கமலநாதன்-சாலை ஆய்வாளர், அரங்கசாமி (பாவலர்), செயபால கிருட்டிணன் (வணி. இ), (தலைக்கு உரு: 1—00 மேனி)	11—00
78.	திருவாளன்மார் அர. பாலசுப்பிரமணியன், சு. சாமிநாதன், இரா. பழனிச்சாமி, கா. பழனிச்சாமி, மு. சுப்பிரமணியன், சீ. ஈசுவரன், பழனிச்சாமி, பா. இராசசேகர் (தலைக்கு 50 காசு மேனி)	4—00
79.	நெய்வேலி உலகத்தமிழ்க் கழகம் மேலைக் கிளையின் சார்பாக திரு. மா. தமிழ்மணி அவர்கள் வழி	43—00
	மொத்தம்:	78—00
	முன் தொகை:	1571—00
	தொகு மொத்தம்:	1649—00

படித்துப் பயன் பெறுங்கள் !

புலவர் திரு. த. (சரவணத்) தமிழன் அவர்கள்

இயற்றிய இலக்கண நூல்

தமிழ் நூல்

(பாவும் உரையும்)

விலை : உருபா 4—00

கிடைக்குமிடம்:— இயற்றமிழ்ப் பயிற்றகம்,
நடவாகனத் தெரு,
திருவாரூர் (அஞ்சல்) தஞ்சை மாவட்டம்.

(24-ஆம் பக்கத் தொடர்ச்சி)

'கண்டிப்பதும் காப்பாற்றுவதே' என்ற தங்கள் கூற்றுப்படி தென்மொழியைக் (காப்பாற்ற என்ருல் முடியாதநிலை என்ருலும்) கண்டிக்க வேண்டிய நிலையுள்ளது. ஒவ்வொருவருக்கும் தங்கள் கருத்தைச் சொல்ல உரிமையுண்டே தவிர, மற்றவர்களைத் தாக்கும் படியும் வன்சொல்லால் கூறவும் உரிமையில்லை. ஆனுல் அதையே தாங்கள் உரிமை என்று நினைப்பதாகத் தங்கள் உரையிலிருந்து விளங்குகின்றது. என்னைப் போன்ற அன்பர்கள் தங்கள் தனிப்பட்ட அரசியல் கருத்துக்காகத் தென்மொழியைப் படிக்கக் கூடாது என்று கருதும் கருத்துக்கொண்டவர்கள் அல்லர். தாங்கள் யாரையும் எப்படி வேண்டுமானுலும் தாக்கினுலும் தங்கள் கருத்துக்கு மறுப்புக் கூறவேண்டிய கடமை எங்களுக்குண்டு.

இன உணர்வைத் தூண்டும் முறை மற்ற இனத்தவரைத் தாக்காத முறையில் அமைய வேண்டும். கன்னடர் சேனைத் தலைவர் வட்டல் நாகராசு எப்படி நம் இன உணர்வை மதிக்காமல் நடந்து கொள்ளும் போதும், சிவசேனையினர் தமிழர்களைத் தாக்கிய போதும் நாம் எந்த உணர்வுடன் இருந்தோம்; எவ்வளவு வீர உரைகள் அவர்களை ஒடுக்கப் பயின்ருேம். அதைப் போன்ற உணர்வுதான் மற்றவர்களுக்கும் என்பதை நாம் எண்ண வேண்டும். மலையாள நடிகர் என்று தாங்கள் இழிவாகப் பேசுவது எத்தனை நண்பர்களுக்கு வருத்தம் தரும் செய்தியாக அமையும். அதுவும் சேர, சோழ, பாண்டியரில் ஒரு பிரிவுத் தமிழர்தாம் இன்றைய மலையாளத்தினரும் என்பதைத் தாங்கள் மூடி மறைப்பதால் உண்மை மறையப் போவதில்லை. அவரைத் தமிழர் என்று ஏற்றுக் கொள்ளத் தங்கள் மனம் மறுக்கிறதோ என்னவோ.

திரு. எம். சி. இரா. கணக்குக் காட்டவேண்டும் என்று கூறியதும் நாம் கறைபடாதவர்கள் என்பதைக் காட்டத்தானே. ஆனுல் தி.மு.க.வினரின் குட்டு வெளிப்படும் எனறு அஞ்சியதால் அவரை வெளியேற்றியது மட்டுமன்று தூற்றவும் செய்தனர். கணக்குக் காட்டியிருப்பின் மக்கள் தீவிரமாகத் துணை நின்று போற்றியிருப்பர். தி.மு.க. வினரும் தமிழைப் போற்றி வெற்றி நடை போட்டிருக்கலாம். ஆனுல் கழகம் இன்று வீழ்ச்சி அடைந்தது என்பதைத் தாங்கள் ஏற்கமாட்டீர்கள். தேர்தல் வந்தால் தெரியும்.

தென்மொழியில், "தண்டவாளத்தில் தலை வைத்துப்படுத்தால் வீரம் வந்துவிடுமோ" என்றும், கலைஞர் பண்டாரகர் பட்டம் பெற்ற போது "பட்டம் என்ன சுண்டல் கடலையா" என்றும், அண்ணாமலை நிகழ்ச்சிகளை நேரில் கண்டால், "யாகியாகானே தோற்றேன் என்பான்" என்றும் 'பொருளற்ற எதுகை மோனை கொண்ட அடுக்கு உரைகளால் தமிழ் வளராது' என்றும் எவ்வகையில் எழுதினீர்களோ! தமிழர் ஒருவர் பட்டம் வாங்கிய போது அவரைத் தாக்கி எழுதிய தாங்கள் அவரை இன்று புகழ்வதும் தங்களின் வெற்றியன்று; தோல்வி என்பதை அறிந்து கொள்வீர்கள்.

எப்படியிருப்பினும் பாவாணரைப் பயன்படுத்திக் கொண்டு தமிழுக்கு அடிப்படையான அகரமுதலி எழுத அரசு துணை செய்ய இப்பொழுதாவது ஏற்பாடு செய்தீர்களானால் தங்களால் அந்தக்குறை நீங்கும். அதோடு பாவாணரையும் அரசால் பயன்படுத்திக் கொள்ளவும் ஏதுவாகும். கண்டிப்பது என்பது வேண்டுகோள் முறையில் இருந்தால் பாராட்டப்படும். இதைத்தான் அண்ணாவும் கூறினார்.

தி.மு.க.வின் திட்டங்களைப் பற்றி நாங்கள் குறை கூறவில்லை. நாங்களும் நேற்று வரை அவர்களுடன் இருந்து அத்திட்டங்களைச் செயல்படுத்தியவர்கள் தாம். ஆனால் அவர்களின் நடைமுறையில்தான் குறையுள்ளது. அவர்களின் வன்முறைப் போக்கு, அதிகாரத்தைச் சொந்த நலனுக்குப் பயன்படுத்துவது, மாற்றாரை அடக்கியாள முயல்வது, கையூட்டு, ஊழல் முதலியன நடைமுறையில் உள்ளன. அதைத்தான் எதிர்க்கிறோம்

ஒவ்வொரு மாநிலத்திலும் ஊழல் இருக்கத்தான் செய்கிறது. அதைப் போக்கவே ஒரு குழுவை வைத்து ஆய்வு செய்ய வேண்டும் என்று எம். சி. இரா. கூறினார். அதைப் போலவே இங்கும், இந்திரா வின் மீதும் அ. தி. மு. க.வின் சட்டமன்ற உறுப்பினர்களும் அதில் அடக்கம் என்று விளக்கம் முன்பு தந்தார். அ. தி. மு. க உறுப்பினர்கள் மீது உள்ள குற்றச்சாட்டு உண்மையாக்கப் பட்டால் அதற்குரிய தண்டனையை ஏற்க அவர்கள் அணியமாக உள்ளனர். நடுவன் அரசின் மீது உள்ள ஊழல்களை ஆயவும், குழு அமைக்கவும் தி. மு. க. வினர் முயலவில்லையே ஏன்? மனமாற்றம் அடைந்தால், கெட்டவனாக இருந்தவன் நல்லவனாக மதிக்கப்படுவான். அந்த நற்பெயர் கொள்ள தி.மு.க.வினர் தயங்குவதேனோ? அரசியல்

அமைப்புச் சட்டத்தில் ஓட்டை உண்டு என்பது பலரின் கருத்து. அதற்காகக் கொள்ளையடிப்பவர்களின் கொள்ளை விளக்கங்களைத் தெரிந்தும் வெளிப்படுத்த இவர்கள் (தி. மு. க.) தயங்குவதேன்? இவர்களே கொள்ளையர்களைவிட மாபெரும் கொடியவர்கள். இராக்காலத்தில் திருடுவது ஓரிரண்டாக நமக்குத் தெரிகிறது என்றால் தெரியாமல் எவ்வளவோ ? அவ்வாறு நடக்கத்தான் செய்யும் என்று தாங்கள் கூறுவது, நான் திருடத்தான் செய்வேன் என்று கூறுவதை ஒக்கும். அதனால் ஏற்படும் நன்மை தீமை மக்களைத்தான் சேரும். மாற்று மொழிக்காரன் இந்தித் திணிப்பு நடக்கத்தான் செய்யும் என்று அலுவலர்களைக் கட்டாயமாக்கிப் படிக்க வைக்கின்றானே அதை நாம் ஏற்றுக் கொள்கின்றோமா ? அதற்கு முழு எதிர்ப்புத் தெரிவிக்காததேன் ? இதை நடத்திக் காட்டுவது திரைப்படமன்று. அப்படித் திரைப்படமாக இருந்தாலும் உண்மை நிலையை மக்கள் புரிந்து கொள்ளவே உதவுகிறது. அட்டைக்கத்தி ஏந்துவது, தூவலையே வாள் என்று எழுத்தாளர் கூறுவதை ஒக்கும். திரைப்படத்தின் வழி எப்படி அரசு மாற்றப் படுகிறது என்பதைப் பழைய வரலாற்றைப் பார்த்தால் புரியுமன்றோ ?

பட்டம் என்பது தாங்கள் நினைப்பது போல் 'சுண்டல் கடலை' அன்று. மாற்றார்கள் அதைப் போற்றி வரவேற்க மாட்டார்கள்தாம். பிறகு போற்றுமளவிற்கு அவர்கள் நடந்து கொண்டால் அதில்கருத்து வேறுபாடு இல்லை. மற்றவர்களுக்குக் கிடைக்கிறதே என்ற வெறுப்புணர்ச்சி ஏற்படின் மிகத் தீமையே விளையும். காலத்தால், இடத்தால்தான் எம். சி. இரா.வின். குற்றச்சாட்டு வலிமையுள்ளதாக உள்ளது. அதைக் கண்டு அச்சப்படுபவர்கள்தாம் இரக்கப்பட வேண்டியவர்கள்.

சட்டத்தைக் காட்டி ஆட்சியை அகற்ற முடியாவிட்டாலும் அடுத்து அந்தச் சட்டமே மக்களால் அந்த ஆட்சியைத் தூக்கி எறியும். கலைஞரின் ஆட்சி தமிழருடையது என்பது அவர் தமிழைப் பாடமொழியாகக் கொண்டு வந்த போதே தெரியும். இந்தத் தமிழர்கள் அன்று அதற்குத் துணை தெரிவித்து இருந்தால் மாணவர்களின் எதிர்ப்பு தூள்தூளாகியிருக்கும். ஆனால் இந்தத் தமிழர்கள் அன்று எந்தப்புற்றில் இருந்தனரோ ! தென்மொழியும் அன்று வாய்மூடி வீரராகவே இருந்து விட்டது. அட்டைக்கத்திக் காட்சிகளை அருவருப்பாகக் காட்டும் அந்தக் காட்சிகளின் கதையை எழுதுவதால்தானே ! அப்படியிருக்க நடிப்பதைக் குறைகூறிப் பயன் இல்லை. ஆனால் இழிவான பாடல்

இழிவான கதை எழுதுவது தொழிலாகக் கொண்ட நேர்மையாளர்களாயிற்றே அவர்கள். அதற்கு எதிர்ப்பு இல்லையே ஏன் ?

"கலைஞரின் ஆட்சி அப்பழுக்கற்றது என்று சொல்ல நாங்கள் முன் வரவில்லை. அதைப் போன்றதோர் ஆட்சி இந்தியாவில் எந்த மாநிலத்திலும் வரமுடியாது" என்று நீங்கள் கூறுகின்றீர்கள். யாரும் தனிப்பட்ட முறையில் அப்பழுக்கு அற்றவர்கள் என்று கூற முடியாதுதான். ஆனால் அது குறைந்து நன்னிலை பெற வேண்டும் என்றுதான் எல்லா அற நூல்கள் முதற்கொண்டு தங்கள் பாடல்கள் வரை உள்ளன. அறநூல்களைப் போற்றுவதால் மட்டும் நாம் உயர்வடைய மாட்டோம்: நடைமுறையில் கொண்டுவரவேண்டும்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் செயலையே தவறு என்று கூறுகின்றீர்கள். ஆனால் தி.மு.க.வினர் அவரைத் தெய்வமாக மதிக்கின்றனர். அவர்களுக்கு நீங்கள் துணை தருவதாக ஒப்புக்கொண்டால் அண்ணா அவர்கள் தவறு செய்தார்கள் என்ற தங்கள் கருத்தை அவர்கள் ஒப்புக் கொள்ளும் நிலை ஏற்படுகிறது. ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகத் தெளிவாக, உறுதியாகக் கூறியுள்ளார், "சட்டத்தால் மக்களிடம் ஏற்படும் மாற்றத்தைவிட நாடகங்கள் திரைப் படங்களால் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும்" என்று. அந்தக் கொள்கைதான் 'தென்மொழிக் கொள்கைச் (விடுதலை) செயற் பாட்டு' மாநாட்டில், "எந்நாளோ?" என்ற நாடகம் நடத்தப்பட்டுப் பின்பற்றப் பட்டது. எம். சி. இரா. அவர்கள் நடிக்கும் படங்கள் எல்லாம் நன்னடத்தையைக் கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தும் இலக்கியமாகத் திகழ்கின்றனவே தவிர, மக்கள் கெட்டுப் போகும் முறையில் இல்லை. தயாரிப்பாளர் விருப்பத்தால் இயக்குநரால் கூறப் பட்டு எடுக்கப்படும் காதற் காட்சிகள் தமிழர் பண்பாட்டை மீறியிருக்கலாம். ஆனால் அக்காட்சிகள் எல்லாப் படங்களிலும் வருகின்ற ஒரு நிகழ்ச்சியாக இருக்கின்றது. எனவே அவருடைய படங்களை மட்டும் குறைகூறிப் பயனில்லை.

பாடல்களால் மன்னர்களின் வரலாறு தெரிந்து கொள்ள உதவுவதைப் போல் திரைப் படங்களும் இக்கால மக்கள் பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொள்ள உதவுகின்றன. அதனுடன் நாடகத் துறையும் வளர்ச்சி பெற்றுத் தமிழும் வளர்கின்றது என்பதை ஒப்பாதவர் யார் ? – தென்மொழியைத் தவிர.

கதைத் தலைவன் நல்லவன் என்றால் மட்டும் போதாது! நடிப்பவனும் நல்லவனாக இருக்க வேண்டும். ஒழுக்கம் கெட்டவர்கள்

கடவுட் கோலம் போடுவதைவிட என்றும் நல்லவனாக இருக்க வேண்டும் என்பது எவ்வளவோ மேல். அரசன், அரியணை, ஆண்டி, பாணன்,விறலி என்ற உவமைகள் பழங்காலத்தன.இந்நாட்டில் உள்ள குடிமகன், எக்குடிப்பிறப்பினனாயினும், எந்நிலையில் உள்ளவனானாலும் மக்கள் விரும்பின் நாட்டுத் தலைவனாக ஆகலாம். மக்கள் ஏற்றுக் கொள்கின்றனர் என்றால் அவனிடம் திறமையும் அறிவும் இருந்தால் தானே முடியும். நடிகர் என்பதால் தலைவராகவோ மற்றும் ஆட்சியில் வரக்கூடாது என்றோ சட்டம் எதுவும் இல்லை. பழைய உலகில் சுற்றிக் கொண்டிருக்கும் தங்களுக்கு இந்த இன்றைய நிலை புரியாமல் போவதில் வியப் பொன்றும் இல்லை.

எம். சி. இரா.வின் குற்றச்சாட்டுகள் ஒருசில வெளிவந்துள்ளன. அவற்றிற்கு நேருக்குநேர் விடை கூறத் தென்மொழி கடமைப் பட்டுள்ளது – அவர்கள் விடை கூற விரும்புவதால். ஆரியக் கலப்பு என்பது பண்பாட்டை மட்டும்தான் குறிக்கும். இன்றைய மாந்தன் எந்த இனத்தவனாக இருப்பினும் அறிவியல் முறைப்படி அவன் ஒரே இனத்திலிருந்து வந்தவன். முழு வளர்ச்சியடைந்தவன். தமிழன் பழமை வாய்ந்தவன் என்பதால் மற்றவர் அவன் வழித்தோன்றலே என்க. எனவே இதைத் தெரிந்திருந்தும் பகுத்தறிவாளர்களின் ஆரியக் கலப்புள்ள, கலப்பற்ற தமிழன் என்பது இனப்பகையைக் காட்டுமே தவிர மனம் தமிழை ஏற்றுக் கொண்டால் அவன் தமிழன் என்பதில் ஐயமில்லை. அதுவும் சேரன் வழித் தோன்றலாகிய மலையாளத் தமிழர்தாம் எம். சி. இரா. அவர்கள். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு, இங்கேயே வளர்ந்து, தமிழருக்காகப் பயன்படும் அவர் தமிழர் என்பதில் ஐயம் கொள்வோர் பகைமை யுணர்ச்சி காட்டுகின்றனர் அன்றி வேறு எவ்வகையினராம் என்க.

கலைஞர் தமிழர்தாம். அவரின் ஆட்சியும் தமிழன் ஆட்சியே. அதற்காக அவரை அரசிய லுலகில் எந்தத் தமிழரும் எதிர்க்கக்கூடாது என்பவர்கள் அரசியல் பண்பே அறியாதவர்கள். தமிழுக்கு இழுக்குவரின் எல்லாரும் ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டுமே யன்றி கலைஞர்தாம் அவ்வாறு செய்ய வேண்டும், அவரால் தான் முடியும் என்று கூறின் அதைவிட மானக்கேடு வேறு இல்லை. அவ்வாறு ஒற்றுமையுணர்வு இருந்தால் யாராலும் தமிழை அழிக்க முடியாது. அதற்காக அரசியலில் மொழி, இன வேறுபாட்டையைக் கூறிக்காலம் தள்ளுவது இன்று மகிழ்ச்சியாக இருக்கலாம். ஆனால் எம்.சி. இரா.விடம் அல்லாமல், கலைஞரிடம் அல்லாமல், காமராசரிடம் அல்லாமல் வேறு யாரிடமாகிலும் ஆட்சி வந்தால், நாம் இனமொழி வேறுபாட்டு உணர்வைத் தூண்டுவது போல், அவர்களும் செய்வர். எனவே இனத்தையும் மொழியையும் அரசியலில் இழுக்காதீர்கள். ஆகவே அரசியல் முறைகளில் அரசியல் கட்சிகள் செயல்பட வேண்டும் என்பதே மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். மொழி, இனத்திற்குக் கேடு வந்தால் உண்மைத் தமிழர் அனைவரும் ஒருங்கு கூடுவர் என்பதில் ஐயமில்லை. அன்று அ. தி. மு. க.வும் தமிழருடன் இணைந்து போராடும் என்பதை அனைவரும் அறிமின்கள். நானும்

மொழியுணர்வால் மாநாட்டிற்கு வந்தவன்தான். என்னைப் போன்று உணர்வுள்ள தமிழர்கள் இங்கு (அ. தி. மு. க) ஏராளம்; ஏராளம். இதைக்காணும் தமிழ் உணர்வினர் அ. தி. மு. க.வை வெறுத்து ஒதுக்காமல் செயல் படுவீர், உண்மை நிலையறிந்து என்று வேண்டிக் கொள்கின்றேன். ஆசிரிய உரை எழுதிய அவர்களுக்கு மட்டும்தான் எதிர்ப்பு, பாவலருக்கு அன்று என்பதை அறிமின்கள். அன்பன்

சா. சு. மணியம். காஞ்சி-3

0. 171: ஓரிறைப் பேராற்றலை உடைப்பிலே போட்டுவிட்டு......

கைகூப்புகள் பல்கோடி. கண்டேன் காலத்தே வந்த தங்களின் கவின்மிகு ஆசிரியவுரை! கொண்டேன் கழிபேருவகை!! சின்னாட்களாய் மண்ணிலே கிடந்த எச்சில் இலையெலாம் விண்ணிலே பறந்தன வீரார்ப்போடு. அரியணையமர ஆலாய்ப் பறந்தனர் அரிதாரம் பூசியவர்கள். புதிய வரலாறு படைப்பதாக எண்ணிய புரட்டர்களும் புல்லர்களும் வீடணனையும், பிரகலாதனையும், எட்டப்பனையும் பின் தொடர்ந்தனர், கலகம் செய்தனர். கழற்றிவிடப்பட்டனர். ஊரை எத்தி உள்ளக்களிப்புடன் வாழ்வு நடாத்தும் உண்டைக்கட்டிப் பார்ப்பான் முதல் 'தினமணி' சிவராமன், 'தினமலர்' வெங்கட சுப்பையன் வரை திரையுலக எத்தனைச் சுற்றி வட்டமிட்டனர்; வாய் பிளந்த வல்லூருக.

கன்னித் தமிழன் கலைஞராட்சியை நீவிர் கண்டித்தபோதும், போற்றித் திரு அகவல் பாடிய போதும் கவலாது, கவினுற கன்னித் தமிழை [எம் பகுத்தறிவாளர் கழகப் பார்வைப்படி] ஆரிய நச்சரவத்தி னின்று மீட்கவும், வடவாரிய மேலீட்டையும் ஆங்கிலக் கலப்பைத் தடுக்கவும் தவறுது தாங்கள் முயல்வீர்; முயல்கின்றீர் என்ற காரணியத்தால் தென்மொழி வளர்ப்புப் பணியிலும், மறைமலை யடிகளார் வழி வரும் பாவாணரியத்திற்கும் தனியாக மாவட்டம் பலகூட்டி மாநாட்டுப் பந்தலிட்டு மண்ணதிரச் செய்ய வில்லையாயினும் தயங்காது நள்ளிரவாயினும், நடுப்பகலாயினும் சுண்ணம் அடிப்பதி லிருந்து வண்ண வாளி தூக்குவது வரை, நன்கொடை தண்டுவ திலிருந்து நடையாய் நடந்து காவல் துறையினரிடம் கூட்ட இசைவு வாங்குவதுவரை ஒல்லும் வகையான் ஓயாது செயலாற்றியுள்ளோம்.

மாடாய் உழைத்து ஓடாய்த் தேயும் நம்மினம் நாளும் நலிந்து போவது நன்று? அன்றி ஒன்றும் செய்யாமல் ஆடாமல் அசையா மல் கற்படிமமாகப் பார்ப்பனச் சேரியை மட்டும் பருக்க வைக்கும் பரம்பொருள்[?] இப்பாரினிலே இருப்பது நன்று? மறைமலையடிகளார் மறுக்கவில்லை என்பதற்காகவோ,பற்றுக் கொண்டுள்ளார் பாவாணர் என்பதற்காகவோ 'வங்கினைப் பற்றிப் போகா வல்லூடும்பென' நீவிர் கொண்டிருக்கும் ஓரிறைப்பேராற்றலை உடைப்பில் போட்டு விட்டுக் குறைகள் கண்டு,நிறைகள் போற்றிக் குவலயம் ஓங்க நம் மொழியை யும்,இனத்தையும் முன்னேற்ற அயராது பாடுபடும் "அருட்செல்வனர்" ஆட்சியை அரணிட்டு இன்றுரைத்ததுபோல் என்றும் காப்பீராக!

ஒன்றை மட்டும் நும் உள்ளத்தில் நிறுவுக! அரசுக் கட்டிலிலிருந்து 'கலைஞர்' கழன்றால் அல்லது கழற்றிவிடப்பட்டால் தென்னவர்க்கும் தென்மொழிக்கும் தெம்மாங்கு இசைத்து, தென்றல் வீசிட வேறு எவராலும் [செழியன் ஆயினும்: அழகன் ஆயினும்] இயலாது என் பதனைக் ''கல்கி''க் கருந்தேள் அதன் ''தீரன்'' பகுதியிலே கொட்டு வதைக் கண்டாவது, ''தீபம்'' பாம்பு அதன் வினு-விடைப்பகுதியில் படமெடுத்தாடுவதைக் கண்டாவது, ''கலைமகள்'' கக்கும் நஞ்சு கண்டாவது தெரிந்து உணர்மின்! காலம் இதனை உணர்த்தும் கடிதில்! கடவுள் இல்லை! வளர்க நும்பணி!! வெல்க நும் விடுதலைப்போர்!!!

—அழகன் அறி. இ. வளவன் க மு

பகுத்தறிவாளர் கழகம், திருவையாறு.

() : 172: 'தென்மொழி' காரிருள் சூழும்

தனிப்பெரும் தமிழ்ப்புலவா,

வணக்கம், தென்மொழி சுவடி: 10, ஓலை: 5-6 இதழில் அருட் செல்வரின் கைகளை வலுப்படுத்துக என்னும் கட்டுரையை யான் கண்ணுற்றேன். அருட்செல்வர் அரசு ஏதோ ஆட்டங்கண்டது போலவும், அதை அப்படியே கவிழாமல் தாங்கிப் பிடிக்கவேண்டுவது போலவும் உள்ள தங்களின் நோக்கத்தை என்னவென்று கூறுவது? கழக அரசு அருட்செல்வரால் களங்கப்பட்டதற்கான கரணியங்கள் அறியாதனவல்ல. அவரால் இன்னல்களுக் காளானோர் எத்தனைப்பேர் என்பதை விளம்பினால் ஏடுகொள்ளாது.

நாட்டு மக்களுடைய அறியாமை இருளை நீக்கி, மனமாசகற்றிப் புத்தொளிபரப்பும் தூய பணி செய்வோரான ஆசிரியர்களைப் பரிசுச் சீட்டு விற்கவும், கருத்தடைக்கு ஆட்களைப் பிடிக்க ஏவவும் அதன்படி செய்யாவிடில் கணவன் மனைவியராய் உள்ள ஆசிரியர்களை இரு முனைகளாய்ப் பிரித்தாளவும் செய்யவா?

தங்கள் அரசுக்குத் துணையாக உள்ள உழவர் மணிகளுக்கு உடனடியாக வேண்டுவனவற்றைச் செய்வதிலும், மற்றவர்கட்கு நீரிழுக்கும் குழாய்(பம்புசெட்டு)களுக்கான கடன் தொகை அளிப் பதிலும், மின்னியக்கத்திற்கு இசைவு தருவதிலும் கடன் தண்டுவதிலும் கெடுபிடியாக இருக்கவா?

சீராட்டி, பாலூட்டி வளர்த்துக் கல்வி அறிவைப் பெற்றுவா வெனக் கல்லூரிக்குச் செல்லவிட்ட கட்டிளங்காளையைக் குளத்தில் மூழ்கி இறக்கச்செய்த பின்னரும், இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னும் குறளுக்கு இலக்கணமான அவன் தந்தையைக் கொண்டே தான் பெற்ற செல்வனில்லை எனக்கூற வைத்த அருளிலாச்செல்வரின் அருந்தொண்டிற்கா?

தமிழ்வாழ தான்வாழத் துடிக்கும் தமிழ்ப் புலவர்களைப் புறக்காததும், செந்தமிழ்க் கொண்டல், மூதறிஞர், சொல்லேர் உழவர் பாவாணர் அவர்களின் அகரமுதலிக்குத் தென்னகத்தின் பல்வேறு மூலைமுடுக்கிலிருந்து முதலமைச்சருக்கும், கல்வி அமைச்சருக்கும் உதவிசெய்யுமாறு தமிழ்மக்களின் சார்பாக வேண்டுகோள்களை

அளித்தும் விடை வந்ததா ? அல்லது பாவாணரும், நீரும் மற்ற தமிழ்ப் புலவர்களும் உதவிசெய்யுமாறு அறிக்கை விடுத்தும் விடையிறுத்தாரா ? பின் ஏன் கழக அரசுக்குத் துணைபோக வேண்டும் ? இன்னொரு பெருஞ்சித்திரனார் மொழிப் போராட்டத்தில் கலந்துக் கொண்டு சிறைபிடித்துச் செல்லப்படவா ? அல்லது இன்னொரு பாவாணர் வறுமையில் துடிப்பதற்கா?

அண்ணா அமைத்த அரசு உண்மையில் நிலைத்து நிற்க வேண்டும். அது கவிழக்கூடாது. கவிழ்க்க விடக் கூடாது. ஆனால் கலைஞரரசு உடனடியாக ஒழிய வேண்டும். எங்குதான் கையூட்டு ஊழலில்லை என்று கூறியுள்ளீர். எந்த மொழியில்தான் ஆரியக் கலப்பில்லை. அதே போல் தமிழிலும் இருக்கட்டுமே என்று கூறினால் இதை ஒப்புக் கொள்ளுவீர்களா ? ஆரிய நச்சையகற்ற எவ்வளவு பாடுபட்டீர். அதனால் எவ்வளவு இழப்புக்கும் இன்னல்கட்கும் ஆளானீர் என்பதைத் தாங்கள் மறத்திருந்தாலும், தென்மொழி அன்பர்கள் மறந்திருக்க மாட்டார்கள். கையூட்டு ஊழல் மலிவதற்காகவா இவர்களைத் தேர்ந் தெடுந்தோம். இந்தக் கையூட்டு மன்னர்களின் முன்னிலையிலும் பின்னிலையிலும் தாங்கள் ஏதேனும் மாற்றங் கண்டதுண்டா ? ஏழை ஏழை என்று சொல்லிக் கொண்டே தாம்வாழ, தம் குடும்பம் வாழ, தம்மினத்தார் வாழ வகைசெய்து கொண்ட கலைஞர்ஆட்சி இன்னும் நீடித்து நிலைக்க வேண்டுமோ ? கலைஞரின் ‘சார்’ ஆட்சியை எதிர்த்ததால் தூக்கியெறியப்பட்டவரே மலையாள நடிகர். அந்த நடிகர் ஒருவர் இல்லையெனில் இரண்டாம் முறையாகத் தமிழகத்தில் வெற்றி பெற்று அரசமைத்திருக்க முடியாதெனக் கலைஞரை எதிர்த்துப் பேசத் துணிவில்லாத ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களும் மனமுவந்து ஒப்புக் கொள்ளுகின்றனர்.

கல்வி நிலையங்களின் இப்போதைய நிலையென்ன ? எங்குப் பார்த்தாலும் கல்விக் கூடங்கள் மூடப்படுவதும், வேட்டெ:கச் சூடும், குழப்பமும்தானா கலைஞரின் கலை ? அண்ணா உயிரோடிருந்த போது மக்கட்குப் பல வாற்றரிய தொண்டினைச்செய்திருக்கிறது. அவர் மறைவிற்குப்பின் அண்ணாவின் தி. மு. க., கலைஞரின் தி. மு. க. வாக மாறிக் கழகத்தைக் களங்கப்படுத்தி விட்டது.

பாவலரேறு அவர்களே ! தங்களின் தமிழ்த்தொண்டும் அறிவும் அளவிடற் கரியது. ஆயின், கலைஞர் ஆட்சியால் பல இன்னல் கட்காளான தாங்களா இப்படி...! தங்களின் கேள்விக்கு விடை சொன்னதற்கே இவ்வளவு கூனிக் குறுகித் தன் மதிப்புக் குன்றிப் போகுமளவிற்குக் கலைஞரை வானளாவப் புகழ்ந்திருப்பது என்போன்றோர்கட்கு வியப்பையும், வருத்தத்தையும் தருகின்றது.

புலியென வீறுகொண்டெழு பாக்களை இயற்றும் வல்லமை வாய்ந்த பழைய பெருஞ்சித்திரனாராகத் திகழ்வ தெப்போதோ அப்போதே தென்மொழியில் பாக்கள் ஒளிரும். இல்லையேல் தென்மொழி காரிருள் சூழ்ந்த காடாகிவிடும்.

சி. மு. அன்புக்கரசன் வெங்காளூர்-2அ

0 : 349 தனித்தமிழில் தரையெல்லாம் போற்றவரும் 'தென் மொழியில்' இப்படியொரு ஆசிரியவுரையா? தனித்தமிழின் அருமையையும், தமிழனின் பெருமையையும்,உலகெங்கும் பறைசாற்ற வேண்டும் என்று ஓயாது, ஒழியாது, அல்லும் பகலும் அயராது, ஊண் உறக்கமின்றி உழைத்துவரும் அறிஞராகிய பாவாணரைப் புறக்கணித்துப் பல்வேறு போலிப்புலவர்களுக்குப் புகலிடமும், பொருள்நனி கொடுத்தும் போற்றி வரும் புல்லரின் கையை வலுப் படுத்துவதா? பேராயக்கட்சி இருந்த காலத்திலிருந்து தமிழ்ப் படிக்கும் மாணவர்க்கு உதவித்தொகை உருபா (300/) முந்நூறு வரை இருந்ததை, இப்போதுள்ள அரசு-தமிழுக்குத் தொண்டு செய்வதாகப் போலிப்புனைவிடும் அரசு – தமிழின் பெயரைச்செல்லியே ஆட்சிக்கு வந்த அரசு – தமிழ்ப் படிக்கும் மாணவருக்கு உதவித்தொகை உருபா (25/) இருபத்தைந்து கொடுத்ததே அதற்காகக் கலைஞரின் கைகளை வலுப்படுத்துவதா?

தமிழுக்கும் — தமிழனுக்கும் தொண்டு செய்யும் எந்த அரசியல் காரனையும் போற்றுங்கள்! வாழ்த்துங்கள்! அவன் கை வலுப்பெறப் பின் நிற்கிறோம். ஆனால் தமிழ் தமிழ் என்று சொல்லிப் போலிப் புனைவு போட்டுக்கொண்டு தம்பெயரையும் தமிழில் மாற்றிக் கொள்ள விரும்பாதவருக்கும் தம்முடைய சிறப்புப் பட்டத்தைத் தமிழில் போட்டுக்கொண்டால் இழிவு என்று கருதுபவருக்கும் தமிழ்ப் படித்த வனுக்கு உயர்வு கொடுக்க எண்ணாதவர்க்கும், தம்மைப் பெருமைப் படுத்திக் கொள்ளத் தமிழை உறுதுணையாகக் கொள்பவர்க்கும் என்றும் எங்கள் துணை இல்லை. தவறு செய்தவன் தம்பியாக இருந்தாலும் தண்டிக்கப் படவேண்டும். அங்குக் கொள்கைக்குத்தான் முதலிடம். பாசத்துக்கு இடமில்லை. நீங்கள் முதல்வரைச் சந்தித்ததில் எங்களுக்கு ஐயம் ஏற்படுகிறது!

—புலவர். இரத்தினவேலவன் செங்கிப்பட்டி.

0 : 350 இம்முறை அரசியல் பற்றி எழுதும் கரணியம் ஏன் ஏற்பட்டது? அருட்செல்வனார் ஆட்சியைப் புகழ்ந்து எழுதியமையால் தாங்கள் தென்மொழி அன்பர்களை இழந்து வருகிறீர்கள் என்பது உறுதி. தென்மொழி அன்பர்கள் உங்களைக் காவாவிடினும் அருட் செல்வனார் உங்களைக் காப்பாற்றுவதற்காகவே அரசு அமைத்துள்ளார். கலைஞரை நேருரை (பேட்டி) காணும் சூழ்நிலை தங்களுக்கு ஏன் ஏற்பட்டது? அதன் வழியாக அரசியல் சூழ்நிலை போக்கப்பட்டதா? அன்றியும் அவர் கொடுத்திருக்கும் மறுமொழி நேர்முகமானதா? அனைத்தையும் உணர்வீர்கள். மொழிப்பேரறிஞர் பாவாணர் அவர்களை உலகத்தமிழ் மாநாட்டில் பாராட்டியதையே பெருமையாக நினைத்துள்ளார். பாவாணர் அத்தகைய தகுதிக்கு மட்டுமே உரியவரா? மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டுக்குப் பாவாணர் அனுப்பப்படவில்லை. இதுவே கலைஞரின் தமிழ்த் தொண்டா? கலைஞர் செய்வதே தமிழ்த்தொண்டானால் செ. சொ. பி. அகரமுதலித் திட்டத்துக்கு நாம் ஏன் உறுப்பினர் சேர்க்க வேண்டும்? தென்மொழி தொடங்கி அந்நாள் தொட்டு இந்நாள் வரை எவரையும் நேருரை கண்டதில்லை. ஆசிரிய உரையில் அரசியல் இடம் பெற்றதும் இல்லை. சுருங்கக் கூறின் மாணவர் – மாந்தர் குமுகாயத்திற்கு இவ்வாட்சி நலம் பயப்பதாக அமையவில்லை என்பது வெள்ளிடைமலை.

—'விடுதலை மறவன்' அழகப்பர் கல்லூரி.

0 : 351 தாய்த்திரு நாட்டையும் — தமிழ்ப் பண்பாட்டையும் காத்து, தமிழக மாணவர்களின் விழிகளைத் திறந்து, அனைவர்க்கும் உண்மையினை உணர்த்த நற்றமிழ்ப் பற்றுமிகு நடுநிலை நெஞ்சொன்று தமிழகத்திற்குத் தேவையென்று நான் எண்ணித் துடித்திருக்கும் நேரம் 'தென்மொழி' வரப்பெற்றேன். எனக்கு இனி நம்பிக்கை பிறந்து விட்டது. நாட்டு நிலையை மக்கள் இனி நன்குணர்ந்து விடுவார்கள். மாணவர்கள் மயக்கத்திலிருந்து எழுந்து விடுவார்கள். பணத்தாசை, பதவியாசை இவ்விரண்டும். எந்தெந்த நேரத்தில் எழும்–யார் யாரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வரும், அவை எந்தெந்த நேரத்தில் என்னென்ன பேசும், எத்தனையெத்தனை வடிவங்களைத் தாங்கி எதையெதைச் செய்யும் என்பதனைத்தையும் இனித்தமிழகம் உணர்ந்துவிடும். புரட்டு இரவு போய்ப் பொழுது புலர்ந்து உண்மை மலர்ந்து விடும், உங்கள் முயற்சியால்! உறுதி.

—காரை–அழகன் ஆசிரியர் 'பூஞ்சோலை' காரைக்கால்.

0 ; 352 சுவடி: 10, ஓலை: 2–4 ஆசிரியவுரையைப் பன்னிப் பன்னிப் பன்முறை படித்தேன். தாங்கள், ஆய்ந்து கண்ட ஆறு உண்மைகளும் காலத்தை வென்று இலங்கும் பெற்றியனவாம். தமிழகம் விடுதலை பெறும் முன், தமிழர் தம் வல்லடிமையினின்றும் அறியாமையினின்றும் விடுதலை பெறுதல் வேண்டும். எல்லாத் தமிழரும் நல்லறிவு–நற்றமிழறிவு பெறும் பொருட்டுப் பன்னீராண்டுகளாகப் பன்னருந்துயர்கட்கிடையிலும், அரும்பணி யாற்றி வருவது தென்மொழி. கற்றுவரும் எம்மனோர் எளியரே? தங்கள் கட்டளையினைத் தலைமேற்றாங்கி வினைமுடிக்குந் திண்ணியர். எண்ணிய முடித்தலில் நெப்போலியன் வழியினர். தென்மொழியின் செயற்கருஞ் செயல் திருச்சியில் ஆற்றல் மறவர்களைக் கூட்ட வில்லையா? பிறகேன் தங்கட்குக் கலக்கம்? எண்ணித் துணிந்துள்ளோம் நாம். துணிந்தபின் எண்ணுவதில்லையாற்றே.

—பெ. தமிழ்வேந்தன், உத்தண்டியூர்.

0: 353: தனித்தமிழ்ப் பண்பாடும் குலைந்து, தமிழன் மறத்தைத் துறந்து, அறத்தை மறந்து, ஊக்கத்தைத் துறந்து, தன் நாட்டைக் காத்தற்கு மொழியைக் காத்தற்கு வன்மையற்ற கோழையாகக் கிடக்கும் இந்த நேரத்தில் தனித்தமிழ்த் திங்களிதழ் நடாத்தித் தென்மொழியாம், பொன்மொழியாம் தண்டமிழ்க்கு உயர்வு தர வேண்டித் தூங்கிக் கிடந்த தமிழர் குமுகாயத்திற்கு ஒரு புத்துணர்ச்சி ஊட்டும் வகையில் தாங்கள் நடாத்தி வரும் தென்மொழித் திங்களிதழ் நின்று விட்டதென்று சிலர் சொல்லக் கேட்ட நாள் தொட்டு எம் உளம் அனலிலிட்ட மெழுகென உருகிற்று, தென்மொழியைச் சில நாட்களாகத் தேடியும் கிடைக்கப்பெறாமலிருந்த எமக்கு மன அமைதியே ஏற்படவில்லை. ஆதலின் இதுபற்றி உடன் எமக்கு விடை ஒன்று வரையும்படி தலை தாழ்த்திக் கை கூப்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். இப்படிக்குத் தமிழ்க்காதலர்கள்.

கு. இராசேந்திரன், த. தமிழ்த்தென்றல், சி. மரியதாசு, சொ. இளஞ்சேரன், இரெ. குணசேகரன், பூண்டி.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1. தமிழகம்.